கல்கி
நூறு
டாக்டர்
இரா. மோகன்

கல்கி நூறு

கல்கி நூற்றாண்டு விழாச் சிறப்பு வெளியீடு

முனைவர்

இரா. மோகன்

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : 5, டிசம்பர், 1998
திருவள்ளுவர் ஆண்டு : 2029
உரிமை : பதிப்பாசிரியருக்கு
விலை ரூ. 18.00
மணிவாசகர் வெளியீட்டு எண் : 671

பதிப்பாசிரியர்

டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

சிதம்பரம் : 23069 **சென்னை : 561039**
மதுரை : 622853 **கோயமுத்தூர் : 397155**
திருச்சி : 706450

அச்சிட்டோர் : பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 013.

பாட்டுக்குப் பாரதி - கதைக்குக் கல்கி

பதிப்புச் செம்மல், தமிழவேள் **ச. மெய்யப்பன்**

கல்கி நூற்றாண்டு விழாவில் (1998) கல்கியின் சாம்ராஜியம், பேரரசின் பரப்பளவு, எல்லை, இறையாண்மை மிக விரிவாகவும் விளக்கமாகவும் பேசப்படுகிறது.

நாடெங்கும் நகரெங்கும் நூற்றாண்டு விழா சீரோடும் சிறப்போடும் கொண்டாடப் பெறுகிறது. பாரதிக்குப்பின் தமிழ்மறுமலர்ச்சியில் கல்கியின் பங்களிப்பு பெரியது. மிகச் சிறந்த இதழாசிரியராகவும் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் இவர் திகழ்ந்தார். இவரால் தமிழ் வாசகர் வட்டம் விரிந்தது. இவர்தம் வரலாற்று நாவல்கள் வாசகர் எண்ணிக்கையைப் பல்லாயிரக் கணக்கில் பெருக்கிற்று. திரு.வி.க. அவர்களிடம் இதழியலும் தமிழும் பயின்ற கல்கி இதழியல் உலகில் முன்னோடியாகத் திகழ்ந்து நிகழ்த்திய சாதனைகள் காவியப்புகழ் உடையன.

மொழிப்பற்றே நாட்டுப்பற்றின் மூலம் என்பது திரு.வி.க. கொள்கை. அவ்வழியில் நாட்டுப்பற்று வேரூன்ற, விழுது விடக் கல்கி தம் தமிழாற்றலை முழுதும் பயன்படுத்தினார். இவர் எழுப்பிய அலை ஓசை விடுதலை ஓசை; அந்த அலைகள் என்றும் ஓய்வதில்லை.

கல்கி,

தமிழிசைக் காவலர்
தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சியாளர்
தேசியம் வளர்த்த தேசபக்தர்
வளர் தமிழுக்கு வளம் சேர்த்த தமிழ்க் கொடைஞர்
தொடர்கதை மன்னர்
மனிதநேயம் கொண்ட மாமனிதர்.

இவர் படைத்த முப்பெரும் வரலாற்று நாவல்கள்

1. பொன்னியின் செல்வன்
2. சிவகாமியின் சபதம்
3. பார்த்திபன் கனவு.

இவை வெறும் பொழுது போக்குப் புதினங்கள் அல்ல. தமிழர் பொற்காலத்தின் பொன்னேடுகள். கல்கியின் எழுத்துக்களால் தமிழர் வரலாற்று உணர்ச்சி பெற்றனர். பண்டைப் பெருமை உணர்ந்தனர். பாரில் தலை நிமிர்ந்தனர். இவர் படைத்த பாத்திரங்கள் நம்மோடு உரையாடுகின்றனர்; உலா வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் கல்கி ஒரு சகாப்தம்; ஒரு ஊழி.

பன்முக நலன்களைக் கொண்ட கல்கி கிருஷ்ணமூர்த்தியே ஒரு நிறுவனம். இவர் கல்கி பத்திரிகையைத் தொழிலாகச் செய்யவில்லை; தொண்டாகச் செய்தார். தொண்டர் குலமே தொழத்தக்க குலம். இவரைத் தொழும் முயற்சியில் அறிஞர் இரா. மோகன் அவர்கள் கல்கி நூறு என்னும் இத்தொகுப்பினை உருவாக்கியுள்ளார். கல்கி புகழ்பரப்பும் நூல்களில் இந்நூலுக்கும் ஒரு இடம் உண்டு. ஏனெனில் கல்கியையும் கல்கி நூல்களையும் கற்றுத் தேர்ந்த மோகன் உருவாக்கியது.

அறிஞர் மோகன் முதன்முதலில் மு.வ. நூல்களை ஆராய்ந்த பெருமையர்.

நயத் தந்தை பண்டிதமணியின் உரைநடையை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்.

மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் வாழ்க்கையை எழுதிய வரலாற்றாசிரியர்.

புதிய இலக்கியங்களைக் கற்பிக்கும் பேராசிரியர். இந்தத் தலைமுறையின் இணையற்ற தொகுப்பாசிரியர்.

பட்டிமன்றங்களையும் நனிநாகரிகமாக நடத்தும் நல்லறிஞர்.

வாசகர்களை ஈர்க்கும் எளிய இனிய நடையின் சொந்தக்காரர்.

மோகன் மரபில் பூத்த புதுமலர்.

ஒரு மாபெரும் எழுத்தாளரை - மக்கள் உளங்கவர்ந்த எழுத்துலக வேந்தரை, ஆராய்ச்சி ஆற்றல் மிக்க பேராசிரியர் மோகன் அவர்கள் இனங்கண்டு எடுத்துரைக்கிறார். 'கல்கி நூறு' என்னும் இந்நூல் செய்திகளின் மாலை மட்டுமல்ல; கல்கியின் வாழ்க்கை வரலாறு, எழுத்தாற்றல், மொழிப்பணி, சமூகப்பணி இவற்றின் பல்வகை நலன்களைப் பாருக்கு அளிக்கும் சுவைப்பேழை. புதிய தமிழுக்குப் புதுவலிமை தந்த கல்கிக்குப் புதுப்புகழ் சேர்க்கும் வரலாற்று ஆவணம்.

சில சொல்

'புதிய கருத்துக்களை வெளியிட்டு வாசகர்கள் மனத்தைப் புதிய திசையில் திருப்பி, புதிய யுகத்தைப் படைக்க வேண்டும்' என்ற ஒரே எண்ணத்துடன் 'கல்கி' என்னும் புனைபெயரைப் பூண்டு, தமிழ் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்தவர் ரா. கிருஷ்ணமூர்த்தி (1899-1954). அவர் இவ்வுலகில் வாழ்ந்தது ஐம்பத்து ஐந்து ஆண்டுக் காலமே; ஆனால், அக் குறுகிய கால எல்லைக்குள் அவர் ஆற்றிய அரும்பணிகள் - செய்து காட்டிய சாதனைகள் - மிகப் பலவாகும் தமிழ்ப் புனைகதை உலகில் வரலாற்று நாவல்களுக்கு ஒரு சிறப்பைத் தேடித் தந்தவர்; தமிழ்ப் பத்திரிகைகளையும் பல்லாயிரக் கணக்கில் விற்பனை செய்ய முடியும் என்பதை நிலைநாட்டியவர் - பத்திரிகை உலகில் தொடர்கதைக்கு ஒரு நல்ல மதிப்பையும் நிலையான இடத்தையும் உருவாக்கிக் கொடுத்தவர் - இயல்பான, உயர்தரமான தம் நகைச்சுவையால் தமிழ்கூறு நல்லுலகை என்றென்றும் இன்புறச் செய்தவர் - மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்து மறைந்த மாமனிதர்களுக்கு மண்டபங்கள் நிறுவுவதிலும் நிதி திரட்டுவதிலும் முனைப்புடன் பாடுபட்டவர் - தம்மை வைதாரையும் வாழ வைக்கும் பெருந்தன்மை படைத்தவர் - நாட்டு நலனுக்காக மூன்று முறை சிறை சென்றவர் - தம் வாழ்நாள் முழுவதும் அண்ணல் காந்தியடிகள், மகாகவி பாரதியார், மூதறிஞர் ராஜாஜி, தமிழ்த்தென்றல் திரு.வி.க., ரசிகமணி டி.கே.சி ஆகியோர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டு இருந்தவர் - நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் நடுநிலை உணர்வும் கொண்டு யாரையும் விமர்சிக்கும் அஞ்சா நெஞ்சம் கொண்டிருந்தவர் - ஆற்றலும் திறமையும் இருந்தும் முன்னேற முடியாமல் மனம் வருந்தும் இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வளர்க்கும், உயரிய தாயுள்ளம் பெற்றவர் - இப்படி எத்தனையோ பரிமாணங்கள் கல்கியின் ஆளுமையில் உண்டு.

அமரர் கல்கியின் நூற்றாண்டுவிழாவினை ஒட்டி மணிவாசகர் நூலகத்தின் சார்பில் படைப்பாளர் கல்கியின் பல்வகைப் பரிமாணங்களையும் அவரது ஆளுமையின் பல்வகைத் திறன்களையும் தனி வாழ்வின் பல்வகை நலங்களையும் புலப்படுத்தும் வகையில் ***'கல்கி நூறு'*** என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிடலாமா எனப் பதிப்புச் செம்மல் முனைவர்

ச. மெய்யப்பனார் அவர்களிடம் கேட்டேன்; அவர் பெரு மகிழ்வோடு தம் இசைவினைத் தெரிவித்தார். படிப்பவர்களின் மனத்தில் கல்கியைப் பற்றிய ஒரு நல்லெண்ணத்தைத் தோற்றுவித்து, அவரது நூல்களைத் தேடிப் பிடித்துப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் இந்நூலை நன்கு திட்டமிட்டு தொகுத்து உருவாக்கியுள்ளேன். கையெழுத்துப் படியாகவே இந்நூலைப் படித்துப் பார்த்த என் மாணவர் திரு. கந்தசுப்பிரமணியனும், என் நலமான வாழ்க்கைத் துணை முனைவர் நிர்மலாவும், நூல் படிப்பதற்கு நன்றாகவும் கல்கியைப் பற்றி நிறைவாகவும் அமைந்திருப்பதாகப் பாராட்டினர். இவ்விருவரது கருத்துக்களை வழிமொழிவது போலவே, உடல்நலம் இல்லாமல் இல்லத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நிலையிலும் இந்நூலை ஆர்வத்துடன் படித்துப் பார்த்த பதிப்புச் செம்மல் முனைவர் ச. மெய்யப்பனாரும் கருத்துத் தெரிவித்தார். அவர் கருத்தைக் கேட்டபோது 'இங்கிதனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்!' என்று பாரதியைப் போல் பாடிக் களிக்க வேண்டும் என்றே என் மனமும் ஆசைப்பட்டது.

இந்நூல் உருவாக்கத்தில் எனக்கு அரிய நூல்களும் சிறப்பு மலர்களும் தந்து உற்றுழி உதவியவர்கள் பலர் ஆவர். அவர்களுள் கல்கி அவர்களின் அருமந்த புதல்வர் திரு. கி. ராஜேந்திரன், திரு. பா. கிருட்டிணமூர்த்தி (திருக்கோகர்ணம், புதுக்கோட்டை), திரு. ல. கி. ராமானுஜம் (திருநாராயணபுரம், திருச்சி), ஆகியோர் சிறப்பாகக் குறிக்கத் தக்கவர்கள் ஆவர்.

தனிப்பட்ட முறையில் ஒரு செய்தி: 'டாக்டர் மு.வ.வின் நாவல்கள்' என் முதல் நூல்; 1973ஆம் ஆண்டில் வெளிவந்தது. இப்போது 1998இல் - என் எழுத்துப் பணியின் வெள்ளி விழா ஆண்டில் - 'கல்கி நூறு' என்னும் இந்நூல் வெளிவருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகின்றது. இது என் 40ஆவது நூல் என்று எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

கல்கியின் எழுத்தின்பால் என்றென்றும் அக்கறையும் ஆழ்ந்த அன்பும், கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான இலக்கிய ஆர்வலர்கள் இம் முயற்சியை வரவேற்றுப் போற்றுவார்கள் என நம்புகிறேன்.

மதுரை - 625019

இரா. மோகன்

உள்ளுறை

எண்	இயல்	பக்கம்
I	கல்கியின் குடும்பத்தினர் வெளியிட்டுள்ள தகவல்கள்	9
II	கல்கியின் நகைச்சுவைகள்	16
III	கல்கி போற்றிய பெரியோர்கள்	43
IV	கல்கி கையாண்டுள்ள குட்டிக் கதைகளும் வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புக்களும்	56
V	முன்னுரைகள் வெளிப்படுத்தும் கல்கியின் ஆளுமை	71
VI	கல்கியின் பல்வகைப் பரிமாணங்கள்	81
VII	கல்கியின் படைப்பாற்றலும் பெருவாழ்வும்	107

I. கல்கியின் குடும்பத்தினர் வெளியிட்டுள்ள தகவல்கள்

1

‘வெளியில் கவர்னர் பெண்டாட்டி... வீட்டில் ரிஷி பத்தினி!’

அமரர் கல்கியின் துணைவியார் எண்பத்தெட்டு வயது முத்துலட்சுமி என்கிற ருக்மிணி அம்மையார் ‘ஆனந்த விகடன்’ இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கும் தகவல்:

“எழுதப் படிக்கத் தெரியாம, கடிகாரத்துல மணி பார்க்கத் தெரியாம கண் திறக்காத பூனைக்குட்டி மாதிரி இவரோட வந்து சேர்ந்தேன். எல்லாம் கொடுத்தார். ‘பொம்மனாட்டி உசிர்ல பாதி புருஷன்’னு சொல்வா. என்னோட உசிர் பூராவுமே அவர்தான்.

சுதந்திரப் போராட்டத்தில அப்பப்போ ஜெயிலுக்குப் போகும்போது ஜெயில்லேருந்து எனக்கு ரகசியமாக் கடிதாசு எழுதுவார். அதிலேயும் தேசபக்தியும் இலக்கிய வெறியும்தான் இருக்கும். கடிதங்கள்லே கம்பராமாயணம் எல்லாம் எழுதி அனுப்புவார்...

வெளியில் போனால் கவர்னர் பெண்டாட்டி. வீட்டில் இருந்தால் ரிஷி பத்தினி. அப்படித்தான் என்னை வைத்திருந்தார்.

செட்டா இருந்த நாள்லே செட்டா இருந்து, உசத்தியா இருந்த நாள்லே உசத்தியா இருந்தவர்... அவரைப் பத்திப் பேசணும்னா அவரோட இருந்த ஒவ்வொரு விநாடியைப் பத்தியும் பேசணும்.”

– ஆனந்த விகடன், 13.9.1998, பக். 146–147.

2

அமரர் கல்கி பற்றி அவரது துணைவியார்

"எழுதப் படிக்கத் தெரியாத நான், தமிழின் தலைசிறந்த எழுத்தாளருக்கு மனைவியானது விசித்திரம்... நான் பள்ளிக்கூடமே போனதில்லை என்பதால், எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

இந்த விஷயம் என் கணவருக்குத் தெரியாது. சென்னையில் தனிக்குடித்தனம் ஆரம்பித்த பின்தான் இந்த விஷயம் அவருக்குத் தெரிய வந்தது.

ஆனாலும், அவர் கோபித்துக் கொள்ளவில்லை. சலித்துக் கொள்ளவும் இல்லை. 'அதனாலென்ன, இனிமேல் கற்றுக்கொண்டால் போச்சு' என்று அவர் சொல்லியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அதற்கப்புறம்தான் நான் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டேன்..."

"கல்யாணமாகி, ஒரு வருஷம் வரை நான் பிறந்த வீட்டிலேயே இருக்க, அதன்பின் என் பெற்றோர் என்னைப் புகுந்த வீடான புத்தமங்கலத்துக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

கல்கி மாமா, சென்னையில் மாம்பலத்தில் ஒரு வீடு பார்த்து முடிவு செய்துவிட்டு, என்னை அழைத்துப் போகப் புத்தமங்கலம் வந்திருந்தார்.

அப்போது, எனக்குக் கல்யாணத்துக்காகச் செய்து போட்ட, பதினாலு பவுன் சங்கிலியைத் திடீரென்று காணோம்.

என் புகுந்த வீட்டாருக்கோ, உண்மையிலேயே சங்கிலியைக் காணோமா, இல்லை, சங்கிலி போடாமல்

என் பிறந்த வீட்டார் நாடகமாடுகிறார்களா என்று சந்தேகம். இதனால் பெரும் பிரச்னையானது.

கல்கி மாமா, என்னைக் கூப்பிட்டார். ‘சங்கிலி போட்டது உண்மையா?’ என்று கேட்க, நான் ‘உண்மை தான்’ என்று பதில் சொன்னேன். ‘அது காணாமல் போய் விட்டதா?’ என்று அடுத்துக் கேட்டார். ‘ஆமாம்’ என்றேன்.

உடனே எல்லோரையும் பார்த்து ‘இவள் சொல்வதை நான் நம்புகிறேன். இனி யாரும் இந்த விஷயம் பற்றி வாய் திறக்கக் கூடாது’ என்று சத்தமாய்ச் சொல்லி விட்டார்.

நாங்கள் புறப்பட்டுச் சென்னை வந்த பிறகு, சங்கிலி கிடைத்து விட்டதாகத் தகவல் வந்தது.”

– ‘என் கணவர் கல்கி’, கல்கியின் துணைவியார் திருமதி ருக்மிணியின் பேட்டி, சாவி, 20.8.1998, பக்.5–6; 4–5.

3

'சிறையில் இருப்பதே ஒரு பெரிய தவம்!'

அமரர் கல்கியின் மகள் திருமதி ஆனந்தி ராமச்சந்திரன் 'செம்மலர்' இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ள தகவல்:

"1922-ல் முதன்முதலில் அப்பா சிறைக்குச் சென்றார். ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை. அப்போது, காலிலும் கையிலும் காப்பும் சங்கிலியும் போட்டிருந்தார்களாம். எங்கள் பாட்டியும், சித்தியும் அவரைப் பார்க்கப் போயிருந்தார்கள். சங்கிலியை இழுத்துக் கொண்டோ அல்லது அதைத் தூக்கிக் கொண்டோதான் நடக்க முடியும். சங்கிலியைக் கையில் பிடித்துக் கொண்டு, கட்டம் போட்ட சட்டையுடன் வந்து நின்றிருக்கிறார். இவர்களுக்கு அப்பாவை அடையாளம் தெரியவில்லை. 'என்ன சித்தி நீங்கள் எதுக்காக இந்த ஜெயிலுக்கெல்லாம் வந்தீர்கள்?' என்று அப்பா சொன்ன உடனே சித்திக்கு மிகவும் துக்கம் உண்டானதாம். 'ஐயோ! உன்னை இப்படிப் பார்க்கத் தானா உன் அம்மா தவம் கிடந்து பெற்றாள்?' என்று ஓவென அழுதாளாம். பாட்டி வாயே திறக்காமல் பிரமித்துப் போய் நின்றாராம்.

அப்போது அப்பா, 'நான் காப்பு போட்டுக் கொள்ள வில்லை, சங்கிலி போட்டுக் கொள்ளவில்லை என்று நீங்கள் குறைப்படுவீர்களே! இப்போது சர்க்கார், செலவில்லாமல் காப்பும், சங்கிலியும் போட்டுவிட்டிருக்கிறது. இதற்காக ஏன் அழுகிறீர்கள்? சந்தோஷப்பட வேண்டாமோ?' என்றாராம். 'நாங்கள் சிறைச்சாலையில் இருப்பதையே ஒரு பெரிய தவமாக நினைத்து வந்திருக்கிறோம். நீங்கள் வருத்தப்படக் கூடாது' என்று சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாராம்."

– செம்மலர், அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், செப்டம்பர் 1998, ப. 41.

4

குழந்தைப் பாடலில் கல்கி செய்த மாற்றம்

அமரர் கல்கியின் மகள் திருமதி ஆனந்தி ராமச் சந்திரன் 'தினமணி' தீபாவளி மலருக்கு *(1998)* அளித்த பேட்டியில் வெளியிட்டுள்ள செய்தி:

"ஒரு தடவை என்னுடைய பாட்டு வாத்தியார், 'ஈனச் செயல்கள் புரிந்தேன், உன் இணையடி இணைய மறந்தேன் கண்ணா' என்று பாடல் சொல்லிக் கொடுத்தார். அதையே நான் என் அப்பாவிடமும் பாடிக் காண்பித்தேன். உடனே அவர், 'சிவ சிவா, இது என்ன குழந்தைகள் ஈனச் செயல் புரிந்ததாகப் பாடுவதா?' என்று கூறிவிட்டு, 'ஈனச் செயல் புரிந்தறியேன், உன் இணையடி மறந்தறியேன்' என்று மாற்றிப் பாடிக் காண்பித்தார். 'உன் ஆசிரியரிடமும் இதை நான் சொன்னேன் என்று பாடிக் காண்பி' என்றார். அதாவது குழந்தைகள் எந்த விஷயத்திலும் தவறு செய்யக் கூடாது என்பதில் அவர் குறியாக இருந்தார் என்பதற்கு இதை உதாரணமாகக் கூறலாம்."

– தினமணி, தீபாவளி மலர் 1998, ப. 139.

5

‘அந்த ஜோடி யாருக்காவது பயன்படுமே?’

ஒரு தடவை பேராசிரியர் கல்கி தம் புதல்வி ஆனந்தியுடன் ரயிலில் ஏறும்போது ரயில் புறப்பட்ட வேகத்தில் ஒரு செருப்பு காலிலிருந்து கழன்று விழுந்து விட்டது.

ரயில் பெட்டியில் ஏறியதும் பேராசிரியர் கல்கி தம் காலில் மாட்டியிருந்த மற்றொரு செருப்பையும் ஜன்னலுக்கு வெளியே உடனே விட்டெறிந்தார்.

“என்ன அப்பா? ஒரு செருப்பு தானே விழுந்தது? மற்றொரு செருப்பையும் எறிந்து விட்டீர்களே?” என்றாள் ஆனந்தி.

“அம்மா! ஒரு செருப்பை மட்டும் வைத்துக் கொண்டு என்ன பயன்? இந்தச் செருப்பையும் விட்டெறிந்தால் அந்த ஜோடி யாருக்காவது பயன்படுமே!” என்று முத்தாய்ப்பு வைத்தார் பேராசிரியர் கல்கி.

– பி.எஸ்.மணி, கல்கி சகாப்தம், பக். 50–51.

6

கல்கி, ராஜாஜியிடம் பழகிய முறை!

"இரண்டாவது முறையாகச் சென்னை மாகாணத்தின் தலைமைப் பதவியை ராஜாஜி ஏற்ற காலம். 1953-ம் ஆண்டில் நான் இண்டர்மீடியட் தேறி மருத்துவக் கல்லூரியில் சேர ஆசைப்பட்டேன். 'ஸி.ஆர். அண்ணா ஒரு வார்த்தை சொன்னால் போதுமே! உடனே அட்மிஷன் கிடைத்து விடுமே' என்று என் தகப்பனாரிடம் சொன்னேன். அவர் சிரித்துக் கொண்டே 'சீச்சீச்சிச்சீ!' என்றார். அந்தச் சிரிப்பிலே எனது அறியாமையைக் கண்டு ஏளனமும் 'சீச்சீ!'யிலே அத்தகைய காரியத்தைத் தாம் செய்வது என்பதை எண்ணிக்கூடப் பார்க்கப் பிடிக்காத வெறுப்பும் தொனித்தன. விளைவு, டாக்டருக்குப் படிப்பதற்குப் பதில் மருந்து தயாரிப்பதில் பட்டம் பெற்று, பிறகு அதையும் மறந்தேன் நான். ஸ்டெதாஸ்கோப் பிடிக்க விரும்பிய என் கரம் இன்று பேனா பிடித்திருக்கிறது.

இந்த ஒரு சம்பவமே போதும், ராஜாஜியின் குணச்சித்திரத்தையும், கல்கி அவரிடம் பழகிய முறையையும் புரிந்துகொள்ள."

– கி. ராஜேந்திரன், 'ராஜ ரிஷியும் பேனா மன்னரும்', கல்கியின் 'நாட்டுக்கு ஒரு புதல்வர்', பக். v–vi.

II. கல்கியின் நகைச்சுவைகள்

7

'கதாநாயகர்களே! கதாநாயகிகளே!'

பேச்சு, எழுத்து, வாழ்க்கை மூன்றிலும் இயல்பான நகைச்சுவையில் ஊறித் திளைத்தவர், அமரர் கல்கி. சென்னை மாநிலக் கல்லூரியில் அவர் பேச அழைக்கப் பட்டிருந்தார். கல்லூரி முதல்வர் அவரை அறிமுகம் செய்யும் போது, "கல்கி தமது நாவல்களுக்குக் கருத் தேடி எங்கும் அலைய வேண்டாம். இங்கு வந்துவிட்டால் போதும். இந்தக் கல்லூரி வளாகத்திலே ஏகப்பட்ட கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் அவர் காணலாம்!'' என்று கூறி, மாணவ மாணவியரை உற்சாகத்தில் ஆழ்த்தினார். அடுத்துப் பேச எழுந்த கல்கி, தமது உரையைத் தொடங்கு முன்னர் அவையோரைப் பார்த்து, "கதாநாயகர்களே! கதாநாயகிகளே!" என்று அழைக்கவும் எழுந்த கரவொலி கடற்கரையெங்கும் வியாபித்தது.

– கல்கி, 'ஆசிரியர் பக்கம்', 14.4.1991, ப. 64.

8

'நான் சோடாக் குடிக்க மாட்டேன்!'

ஒரு மேடையில், கல்கிக்கு முன்னால் பேசிய ஒருவர், சபையைக் கண்ட மிரட்சியில் தொண்டை வரண்டு போனதால், வாக்கியத்துக்கு வாக்கியம் சோடா குடித்துக் கொண்டே உளறிக் கொட்டினார். அவருடைய அவஸ்தையைக் கண்டு சிலர் இரக்கப்பட்ட போதிலும், மற்றவர்கள் கேலிக் கூச்சலிட்டுக் கைதட்டினார்கள்.

ஒருவாறு அவர் பேச்சை முடித்துக்கொண்டு தொப்பென்று உட்கார்ந்ததும், கல்கி நிதானமாய் எழுந்து, "சபையோர்களே! பயப்படாதீர்கள்! நான் சோடாக் குடிக்க மாட்டேன்!' என்றார்.

– சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 620.

9

'முடிச்சுக்களை அவிழ்ப்பதில் கைதேர்ந்த மந்திரி!'

ஒரு புத்தகத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றது. கல்வி மந்திரி சி. சுப்பிரமணியன் அவர்கள் விழாவைத் துவக்கி வைக்க வந்திருந்தார். வெளியிடும் புத்தகத்தில் ஒரு பிரதியை பட்டு நாடாவால் சுற்றிக் கட்டி ஒரு முடிச்சுப் போட்டு வைத்திருந்தார்கள். மந்திரி, புத்தகத்தை வெளியிடுவதற்கு அறிகுறியாக அந்த நாடாவை அவிழ்க்க வேண்டும். அந்த விழாவிற்குத் தலைமை வகித்த கல்கி அவர்கள், "அரசியல் முடிச்சுக்களை அவிழ்ப்பதில் கைதேர்ந்த நம் மந்திரியை, இந்தப் புத்தகத்திலுள்ள முடிச்சையும் அவிழ்த்து, வெளியீட்டு விழாவைத் துவக்கி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

– அழ. வள்ளியப்பா, 'பேராசிரியர் கல்கி', சுடர்: கல்கி மலர் (1967), தில்லித் தமிழ்ச் சங்கம் ப. 118.

10

கலகலக்க வைத்த கல்கியின் எச்சரிக்கை!

ஒரு சமயம் ஔவை டி.கே. சண்முகம் நடித்த 'கள்வனின் காதலி' நாடகத்துக்குத் தலைமை வகிக்கச் சென்றிருந்தார் கல்கி திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி.

நாடகத்தின் நடுவில் ஔவை சண்முகம் ஒரு பிரமுகருக்குக் கல்கியைக் கொண்டு நிதியளிப்பு வழங்கினார்.

"இந்தாருங்கோ, பத்திரம் பணம்! இந்தப் பக்கம் கள்ளர் நடமாட்டம் அதிகமாயிருக்கு! ஜாக்கிரதை!" என்று எச்சரித்தார் கல்கி.

திருடன் முத்தையனாக நடித்த ஔவை சண்முகமே இதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்துவிட்டார்.

– பி.எஸ். மணி, கல்கி சகாப்தம், பக். 60–61.

11

'நான் ஒரு பெண்மணியாகக்கூட இல்லையே!'

ஒரு கூட்டத்தில் டி.கே.சி., ம.பொ.சி., கல்கி மூவரும் பேசினர். பேச்சாளரை அறிமுகப்படுத்திய அன்பர் "மும்மணிகள் இன்று பேசுவார்கள்" என்று சொன்னார். அதைப் பற்றிக் கல்கி குறிப்பிட்டது வேடிக்கையாக இருந்தது. "டி.கே.சி. ரசிகமணி; ம.பொ.சி. கிராமணி; நான் மூன்றாவது மணியாக இருக்க ஒரு பெண்மணியாகக் கூட இல்லையே!" என்று கல்கி கூறினார்.

– சோமலெ, பல்சுவைக் கட்டுரைகள், ப. 71.

12

கம்பர் விழா பூண்ட கோலாகலக் கோலம்!

எவ்வளவு கடுமையான சோதனையிலும் நகைச் சுவையோடு நடந்து கொள்வதில் கல்கி சமர்த்தர். சென்னை கம்பர் விழாவில் ஒரு வருஷம் சில அன்பர்கள் எழுப்பிய பூசலில் ஒலிபெருக்கியை யாரோ ஒடித்துவிட்டார்கள். ஒரே பரபரப்பு. கல்கி பேசினார்: "கம்பரிடம் பகைமை பூண்டு வந்த அன்பர்கள், ஒலிபெருக்கிக் கம்பைக் கம்பர் என்று எண்ணிவிட்டார்கள் என்பது தெரிகிறது. இவர்களுக்குக் கம்பர் யார் என்று தெரிவிப்பதற்காகவாவது கம்பர் விழாவை நாம் நடத்த வேண்டாமா?" என்று அவர் கேட்டதும் எழுந்த சிரிப்பிலும் ஆரவாரத்திலும் கம்பர் விழா கோலாகலக் கோலம் பூண்டது.

– சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 827.

13

'டீயே மதுரம்!'

ஒரு சமயம் கல்கி, என்.எஸ். கிருஷ்ணன் வீட்டுக்குச் சென்றிருந்தார். "என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பி கொண்டு வரச் சொல்லட்டுமா? டீ கொண்டு வரச் சொல்லட்டுமா?" என்று கிருஷ்ணன், கல்கியிடம் கேட்டார். கல்கி, சற்று யோசித்துவிட்டு, "டீயே மதுரம்!" என்றார். என்.எஸ். கிருஷ்ணனின் மனைவி டி.ஏ. மதுரம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

– கா.பொ. இரத்தினம் (பதிப்பாசிரியர்), எழுத்தாளர் கல்கி, ப. 13.

14

'அருமை!'

ஒரு முறை என்.எஸ். கிருஷ்ணன், கல்கியிடம், "எனக்குக் கதை எழுத வேண்டும் என்று ஆசை" என்று சொன்னார்.

"அதற்கு நான்கு 'மை' வேண்டுமே!" என்றார் கல்கி.

"என்னென்ன கலர்களில்?'' - இது என்.எஸ். கிருஷ்ணன்.

"திறமை... பேனா மை... தனிமை... பொறுமை..." எனக் கல்கி சொன்னதும்,

"நீங்கள் சொன்னது மிக அருமை...'' என்றார் என்.எஸ். கிருஷ்ணன்!

– தினமணி கதிர், 22.9.1991, ப. 19.

15

'முன்னாலேயே தெரிஞ்சிருந்தால்...'

ஒரு நாள் சிங்கப்பூரிலிருந்து, சில **விகடன்** வாசகர்கள் கல்கியைக் காண ஆவலோடு **விகடன்** காரியாலயத்திற்கு வந்தார்கள். அவர்களது வருகையைப் பற்றிக் கல்கிக்கு அறிவிக்கப்பட்டது. உடனே கல்கி, அவர்களைத் தம் அறைக்கு வரச் செய்து, நமஸ்காரம் கூறி எதிரே உட்கார வைத்தார். வந்தவர்கள் நால்வரும், அவர் மீது வைத்த கண் வாங்காது பிரமிப்பில் ஆழ்ந்தவர்களாக, ஏதும் பேசாமல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்கள்.

கல்கிக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. "உங்களுக்கெல்லாம் பேச வருமோல்லியோ? அதிலும் தமிழ் பேச வருமோ இல்லியோ?" என்று கேட்டார். அவர்கள், "ஆமா, ஆமா, ஆமா!" என்றார்கள். பிறகு அவர்களில் ஒருவர் சொன்னார்: "மன்னிக்கணும். கல்கி என்றதும் உங்கள் கதைகளையும் கட்டுரைகளையும் தலையங்கங்களையும் வாசித்ததும், நீங்கள் ஒரு பெரிய முரட்டு ஆளாக இருப்பீர்கள் என்றுதான் நாங்கள் கற்பனை செய்து கொண்டு வந்தோம். நீங்கள்..." என்று இழுத்தார்கள்.

கல்கி தமது சுபாவக் குபீர்ச் சிரிப்பை எழுப்பிக் கொண்டு, "இது முன்னாலேயே எனக்குத் தெரிஞ்சிருந்தால், என்னைப் 'பெரிதாக்கிக்' கொண்டிருக்க ஏதேனும் செய்திருப்பேனே" என்று கூறி அவர்களைச் சிரிக்க வைத்தார்.

– செம்மலர், அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், செப்டம்பர் 1998, ப. 64.

16

'தமிழ்ப் பண்டிதர்கள் மிகவும் முன்னேறிவிட்டார்கள்!'

ஒரு சமயம், கல்கி சில நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர், 'இப்போதெல்லாம் நம் தமிழ்ப் பண்டிதர்கள் மிகவும் முன்னேறிவிட்டார்கள்' என்றார்.

உடனே ஒரு நண்பர், 'எதை வைத்துச் சொல்லு கிறீர்கள்?' என்று கேட்டார்.

"நான் ஒரு பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்தேன். அங்கு இருந்த எல்லா ஆசிரியர்களும் ஜிப்பா, முழுக்கைச் சட்டை, அல்லது அரைக்கைச் சட்டை போட்டுக் கீழே வேட்டிக் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஒரே ஒருவர் மட்டும் 'டிப்டாப்'பாக 'புல்சூட்'டுடன் இருந்தார். அவர் யார் என்று விசாரித்தேன். அவர் தான் தமிழ்ப் பண்டிதர் என்று தெரியவந்தது. ஆஹா, ஆங்கில ஆசிரியர்கூட 'சூட்' போடவில்லை. தமிழ்ப் பண்டிதர் எவ்வளவு தூரம் 'முன்னேறிவிட்டார்' என்று வியந்தேன்" எனக் கூறினார் கல்கி.

– அழ. வள்ளியப்பா, 'பேராசிரியர் கல்கி', சுடர்: கல்கி மலர் (1967), தில்லித் தமிழ்ச் சங்கம், பக். 117–118.

17

'சிரிக்கத் தெரிந்தவன்!'

"இந்த உலகத்தில் எண்பத்து நாலு கோடியே இருபது லட்சம் ஜீவராசிகள் வாழ்ந்து வருகின்றன. யாருக்காவது சந்தேகம் இருந்தால் எண்ணிப் பார்த்து விட்டுச் சொல்லுங்கள்.

மேற்கூறிய எண்பத்து நாலு கோடியே சொச்சம் ஜீவராசிகளுக்குள்ளே ஒரே ஒரு வகை ஜீவனுக்குத்தான் சிரிப்பதற்குத் தெரியுமாம்!

மிருகேந்திரனாகிய சிங்கத்துக்குச் சிரிக்கத் தெரியாது. புலிக்கும் யானைக்கும் சிரிக்கத் தெரியாது. மகாகனம் பொருந்திய ஆகாகன் அவர்களுடைய பந்தயக் குதிரைகள் கூடப் பந்தயத்தில் தோற்றுப்போன மற்ற குதிரைகளைப் பார்த்துச் சிரிப்பதில்லையாம்! ஜீவராசிகளில் மனிதனுக்கு முந்தைய படியிலுள்ள வானரம் எத்தனை எத்தனையோ கோணங்கி கொனஷ்டைகள் செய்வதைப் பார்த்திருக் கிறோம். அத்தகைய குரங்கு கூடச் சிரிப்பது கிடையாதாம். குரங்கு பல்லைக் காட்டினால் அது கோபத்துக்கு அடையாளமாம்! பறவைகள் சிரிப்பதில்லை என்பதை சொல்லத் தேவையில்லை.

ஆக, உலகில் வாழும் பல கோடி ஜீவராசிகளில் சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் ஒருவன்தான். மனிதன் சிரிப்பதுடன் நிற்கவில்லை. சிரிப்பாய்ச் சிரிக்கவும் செய்வான்.

பறவைகளுக்கு அளித்த இறகுகளையும் விலங்கு களுக்கு அளித்த வாலையும் கடவுள் மனிதனுக்குக் கொடுக்க மனம் இல்லாமல் விட்டுவிட்டார். ஆனால்

அந்தப் பாக்கியங்களுக்கெல்லாம் மேலான சிரிக்கும் பாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார்.

அவ்விதம் கடவுள் மனிதனுக்கென்று பிரத்தியேகமாக அளித்திருக்கும் வரப்பிரசாதமாகிய சிரிப்பை உண்டாக்கவும் பெருக்கவும் வளர்க்கவும் பாடுபடுகிறவர்கள் எல்லாரும் கடவுளுக்கு உகந்த திருப்பணியைச் செய்கிறவர்கள் அல்லவா?"

– எஸ். சங்கரன் (தொகுத்தது), கல்கியின் நகைச்சுவை, பக். 95–96.

18

கல்கியின் நகைச்சுவை

“ஒரு விஷயத்தை மனதில் பதியும்படி எடுத்துச் சொல்ல ஒப்பாரி வைத்தோ அன்றி ஓங்கி யடித்தோதான் சொல்ல முடியும் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் நகைச்சுவை நடை மூலமும் நல்ல விஷயங்களை அறிவுறுத்த முடியும் என்பதை நடை முறையில் நிரூபித்துக் காட்டியவர் கல்கி அவர்கள். யாருடைய மனத்தையும் புண்படுத்தும் கீழ்த்தரமான ஹாஸ்யமல்ல கல்கி புகுத்தியது. இத்துறையில் அவர் தோற்றுவித்தது தமிழிலேயே புதிய சகாப்தம்.

கல்கியின் நகைச்சுவை நடைக்கு ஓர் உதாரணம்:

“இவர் ‘ஹோம் ரூல்’ கிளர்ச்சியில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அதனால்தான் ‘ஹோம் ரூல் கோபால கிருஷ்ண ஐயர்’ என்ற பெயர் வந்தது. வீட்டில் அகத்துக்காரியின் ஆட்சி கொஞ்சம் அதிகமாதலால் இந்தப் பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது என்று சில பொறாமைக்காரர்கள் சொல்வதுமுண்டு.”

– எஸ். சங்கரன் (தொகுத்தது), கல்கியின் நகைச்சுவை, பக். 3–4; 80–81.

19

சிரிப்பு அலைகளை எழுப்பும் உரையாடல்

அதட்டி மிரட்டிக் கேள்விகள் கேட்டால் உளறலாகவும் குளறலாகவும் பதில்கள் வரும் என்பதைக் கொண்டு, 'சிவகாமியின் சபதம்' நாவலின் ஓரிடத்தில் கல்கி சிரிப்பு அலைகளை எழுப்பியிருக்கிறார்:

" 'அடே, நீ யார்? என்ன வேலையாகப் புறப்பட்டாய்? உண்மையைச் சொல்!'

'ஐயா! நான் என் தாயாருடைய மகன். திருவெண் காட்டு வைத்தியரிடமிருந்து மருந்து வாங்கிக் கொண்டு வருவதற்காகப் போகிறேன்.'

'எதற்கடா மருந்து? உனக்கு என்ன கேடு வந்துவிட்டது?'

'எனக்காக இல்லை, ஐயா! அம்மாவுக்கு மருந்து. என் தாயார் அவல் இடிக்கும் போது உரலை விழுங்கி விட்டாள், அதற்காக.'

'என்னடா, உளறுகிறாய்? உன் அம்மா உரலை விழுங்கினாளா?'

'இல்லை, உரலை விழுங்கவில்லை, உலக்கையைத் தான் விழுங்கினாள்!'

'உரலை விழுங்கினாளா, உலக்கையை விழுங்கினாளா? நிஜத்தைச் சொல்.'

'இல்லை, இல்லை! என் அம்மாவை உரல் விழுங்கி விட்டது!'

'அடே, என்னிடம் விளையாடுகிறாயா? உன்னை என்ன செய்வேன் தெரியுமா?'

'ஐயா! மன்னிக்க வேண்டும். உங்களை எல்லாம் பார்த்தால் எனக்கு மிகவும் பயமாய் இருக்கிறது. அதனால் மனத்திலே ஒன்று இருக்க, நாக்கு எதையோ சொல்லுகிறது.'

'இப்போது பயம் இல்லாமல் நிதானமாக யோசித்து உள்ளதை உள்ளபடி சொல்லு!'

'என் தாயார் அவல் இடித்த போது உலக்கை தவறிக் கையில் விழுந்து விட்டது. அதனால் அம்மாவின் கையில் காயமாகி விட்டது.'

'இவ்வளவு தானே, வேறு ஒன்றும் இல்லையே? சத்தியமாய்ச் சொல்!'

'ஆம், ஐயா! சத்தியமாய்ச் சொல்லுகிறேன். உலக்கைக்குத் தான் காயம் பட்டது!' "

இந்த வடிவிலேயே இந்த உரையாடல் நகைச்சுவை கொண்டதாய்த்தான் இருக்கிறது. கேள்வி கேட்டவர் வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசி பதில் சொன்னவன் காஞ்சி ஒற்றன் குண்டோதரன் என்பதை அறிந்தால், இன்னும் சுவை கூடும்.

– சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 618.

•

20

சமயச் சண்டையிலும் நகைச்சுவை!

'பொன்னியின் செல்வன்' நாவலில் ஓர் இடத்தில் சமயச் சண்டையைப் புகுத்தி அதன் மூலம் நகைச்சுவை விருந்தளிக்கிறார் கல்கி.

வீர வைஷ்ணவர் ஆழ்வார்க்கடியானுக்கும் ஒரு வீர சைவர்க்கும் வாக்குவாதம் நடைபெறுகிறது.

'அப்பனே! உங்கள் ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர்தான்! எங்கள் நாயன்மார்கள் அறுபத்து மூன்று பேர்; அதை ஞாபகம் வைத்துக்கொள்!'

'ஓகோ! இப்படி வேறே ஒரு பெருமையா? பஞ்ச பாண்டவர்கள் ஐந்துபேர்தான்! துரியோதனாதியர் நூறு பேர் என்று பெருமையடித்துக் கொள்வீர் போலிருக்கிறதே?'

'அதிகப்பிரசங்கி, எங்கள் நாயன்மார்களைத் துரியோதனன் கூட்டத்தோடு ஒப்பிடுகிறாயா? உங்கள் ஆழ்வார்களிலேதான் பேயாழ்வார், பூதத்தாழ்வார் எல்லாரும் உண்டு!'

'உங்கள் சிவபெருமானுடைய கணங்களே பூத கணங்கள்தானே! அதை மறந்து விட்டீராங்காணும்!'

படிப்போர் சைவராயிருந்தாலும் சரி, வைஷ்ணவரா யிருந்தாலும் சரி புன்முறுவலோடு இப்பகுதியைச் சுவைப்பார்கள்.

– பூவண்ணன், கல்கியின் வரலாற்று நாவல்கள், பக். 214–215.

21

மதிப்புரைக்கு வராத ஒரே ஒரு காகிதம்!

நாட்டின் எந்த மூலையில் அச்சுக் கூடத்தில் எந்தக் காகிதம் அச்சிடப்பட்டாலும், அதில் ஒரு பிரதி மதிப்புரைக்காக என்னிடம் வந்து கொண்டிருந்தது. ஆனால், ஒரே ஒரு காகிதம் மட்டும் வருவதில்லை. அது சர்க்கார் அச்சடிக்கும் பண நோட்டுதான்.

சர்க்கார் எவ்வளவு பிற்போக்கானவர்கள் என்பது இதிலிருந்தே நன்கு விளங்குகிறதல்லவா? இந்த விளம்பர யுகத்தில் விளம்பரத்தின் பெருமையை அறியாதவர்கள் சர்க்காரைத் தவிர வேறு யாருமில்லை. உதாரணமாக, முற்போக்குடைய சர்க்காராயிருந்தால் என்ன செய்யலாம் பாருங்கள்!

பத்து ரூபாய் நோட்டு 1

ஐந்து ரூபாய் நோட்டு 2

நூறு ரூபாய் நோட்டு 6

ஆயிரம் ரூபாய் நோட்டு 12

இவற்றுக்குத் 'தயவு செய்து மதிப்புரை வரைக' என்றெழுதி எனக்கனுப்புவார்களானால், எவ்வளவு நன்றாக இருக்கும்? இதுவரை எந்தப் பிரசுரத்துக்கும் எழுதாத வகையில், அதிஅற்புதமாக மதிப்புரை எழுத மாட்டேனா?

– கல்கி, 'மதிப்புரை', ஏட்டிக்குப் போட்டி, ப. 176.

22

'சட்டம் ஒரு கழுதை?!'

"முதலில், நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். யாரிடம் என்று நேயர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. கழுதையிடந்தான்! கழுதையைச் சட்டத்துடன் ஒப்பிட்டது கழுதைக்கு அகௌரவமாகத் தோன்றலாம். ஆனால், இந்த அவதூறுக்கு நான் பொறுப்பாளியல்ல. 'சட்டம் ஒரு கழுதை' என்று கூறியவர் ஓர் ஆங்கில ஆசிரியர். எனவே கழுதை அவதூறு வழக்குத் தொடர எண்ணினால், தப்பு! மன்னிக்க வேண்டும்! கோர்ட்டுக்குப் போவது போன்ற அறிவீனமான செயலைக் கழுதை செய்யுமா, என்ன!"

– கல்கி, 'சட்டம் ஒரு கழுதை', ஏட்டிக்குப் போட்டி, ப. 62.

23

'தாகூரை விட நான் அதிகம் தெரிந்தவன்!'

"டாக்டர் ரவீந்திரநாத் தாகூர் எவ்வளவு பெரிய மகாகவியாக இருக்கட்டும்; மகாமேதாவியாக இருக்கட்டும்; மெத்தப் படித்தவராய் இருக்கட்டும். ஆனாலும் அவரை விட நான் அதிகம் தெரிந்தவன் என்று சொன்னால் நீங்கள் ஒருவேளை நம்ப மாட்டீர்கள்... 'டாக்டர் தாகூர் எவ்வளவு பெரியவர்? இந்த மனிதன் எவ்வளவு சின்னவன்? அவருடைய தாடியில் நாலில் ஒரு பங்கு நீளமுள்ள தாடியாவது இவனிடம் இருக்கிறதா? அவரை விட இவனுக்கு அதிகம் தெரிவதெப்படி?' என்று கேட்பீர்கள். தெரியும் ஐயா, தெரியும். கட்டாயம் அப்படித்தான் கேட்பீர்கள். இருந்த போதிலும் டாக்டர் தாகூரை விட நான் அதிகம் தெரிந்தவன் என்பதை உங்களுக்கு இந்த நிமிஷத்தில் இரண்டே வாக்கியங்களில் நிரூபித்து விடுகிறேன்.

'டாக்டர் தாகூருக்கு என்னைத் தெரியாது.

எனக்கோ தாகூரைத் தெரியும்.'

ஆகவே டாக்டர் தாகூரை விட நான் அதிகமாய்த் தெரிந்தவன்தானே? உண்மையா? இல்லையா?"

– சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 614.

24

கிரிக்கெட் மீது கல்கிக்கு ஏற்பட்ட மோகம்!

"கல்கி, வ.உ.சி. கல்லூரிக்கு நிதி திரட்டிய விதம் பற்றி திரு. ம.பொ.சி. அடிக்கடி கூறி மகிழ்வதுண்டு. பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டே இருக்கையில் தமது ஜிப்பா பையிலிருந்து ஓர் உறையை எடுத்தார் கல்கி. 'இன்று நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் கிரிக்கெட் மைதானத்திற்குப் போயிருந்தேன். இப்படி ஈ மொய்ப்பது போல் மக்கள் குழுமுகிறார்களே, என்னதான் நடக்கிறது அங்கே என்று பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டே போனேன். அங்கே ஓர் அன்பர், வ.உ.சி. கல்லூரி நிதிக்கு என்று சொல்லி இந்தக் கவரைக் கொடுத்தார். இப்போது இதைப் பிரித்துப் பார்க்கிறேன். அடடா! நூறு ரூபாயல்லவா இருக்கிறது! இத்தனை நாளாகக் கிரிக்கெட் என்றாலே எனக்குப் பிடிக்காமல் இருந்தது. ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து இருபத்திரண்டு பேர்கள் விளையாடுவதை இருபத்திரண்டாயிரம் பேர்கள் வேலை மெனக்கெட்டுப் பார்ப்பானேன் என்று எண்ணி வந்தேன். ஆனால் இப்போது எனக்குக் கிரிக்கெட் மீது அபார மோகம் ஏற்பட்டுவிட்டது. கிரிக்கெட் அபிமானிகள் இந்த மாதிரி நல்ல காரியங்களுக்கும் உதவுவார்கள் என்றால் கிரிக்கெட் அடியோடு வாழ்க!' - கல்கி இப்படிக் கூறி முடித்த பிறகு அந்தக் கூட்டத்திலேயே வ.உ.சி. கல்லூரி நிதிக்காக ஐந்தும் பத்துமாக ஐந்நூறு ரூபாய் வரை சேர்ந்து விட்டது.

வீடு திரும்பும் போது ம.பொ.சி. கேட்டார்: 'கிரிக்கெட் மைதானத்தில் நூறு கொடுத்தவர் யார்? உறை மீது ஏதாவது எழுதியிருக்கிறதா?'

‘அதெல்லாம் ஒன்றுமில்லை’ என்றார் கல்கி. ‘நானாகவேதான் நூறு ரூபாய் நோட்டை உறையில் போட்டு எடுத்துக்கொண்டு வந்தேன். எப்படியும் என்னுடைய காணிக்கையும் வ.உ.சி. கல்லூரிக்குச் சேர வேண்டியது தானே?”

– கி. ராஜேந்திரன், ‘ஸ்தாபனமாக விளங்கிய தனிமனிதர்’, சுடர்: கல்கி மலர் (1967), தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 24.

25

சிரசாசனத்தில் தோன்றிய யோசனை!

கல்கி தமது நெடுநாளைய ஆஸ்துமா நோயைக் குணப்படுத்திக் கொள்வதற்காக யோகாசன நிபுணர் வி.என். குமாரசுவாமியிடம் 'யோகாசன சிகிச்சை' செய்து கொண்டார். முற்றிப் போன நிலை காரணமாய் அவரது நோய் குணமாகவில்லை. ஆயினும், அதன் சிகிச்சைக்காக அவர் பயின்ற சிரசாசனம் அவருடைய கற்பனை ஆற்றல் பெருகுவதற்கு உதவியாய் இருந்தது.

ஒருநாள் கைக்கடிகாரத்தைப் பார்த்து ராஜேந்திரன் கணக்குப் பண்ணிக் கொண்டிருக்க, கல்கி சிரசாசனம் போட்டார். சாதாரணமாய்ப் பத்து நிமிடம் வரை அந்த ஆசனத்தில் நிற்கக் கூடியவர், அன்று இரண்டாவது நிமிடமே அதை முடித்துக் கொண்டார். 'ஏன் இப்படி?' என்று கவலையுடன் மகன் கேட்டதற்கு, 'நிற்க முடியாததால் அல்ல' என்று அவர் பதில் சொன்னார். 'சேந்தன் அமுதனை ராஜாவாகப் பண்ணிவிடலாமே என்று யோசனை தோன்றியது. அதனால்தான்' என்றார். அந்த யோசனையின் படியே 'பொன்னியின் செல்வன்' கதையில் ஒரு திருப்பம் கொடுத்து எழுதுவதற்காக மேஜையை நோக்கி நடந்தார். சேந்தன் அமுதனின் விதியும் மாறிற்று; அத்துடன் கதையின் கதியும் மாறிற்று.

– சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 811.

26

'மயிலுக்குத் தோகை நீண்டால் என்ன?'

எட்டயபுரம் பாரதி மண்டப நிதிக்காகக் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நானும் கோயம்புத்தூர் சென்றிருந்தோம். இலக்கிய ரசிகர்கள் நிரம்பிய கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டோம். ரசிகர்கள் நிதி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்திலிருந்த ஒரு ரசிகர் எழுந்து "கல்கி அவர்களே, தாங்கள் எழுதும் 'சிவகாமியின் சபதம்' நீண்டு கொண்டே போகிறதே?'' என்று சொல்லிக் கொண்டு வரும்போதே நான் இடைமறித்து, "ஆமாம், நீண்டு கொண்டு தான் போகிறது. ஐயா, குரங்கிற்குத்தான் வால் நீண்டு கொண்டு போகக் கூடாது. மயிலுக்குத் தோகை நீண்டால் என்ன?" என்று ஒரு போடு போட்டேன்.

அதைக் கேட்ட உடனே மேற்படி ரசிகர், "தங்கள் பதில் என்னைப் பரவசமடையச் செய்து விட்டது. நான் பாரதி நிதிக்குப் பத்து ரூபாய்தான் கொடுக்கலாம் என்று வந்தேன். இப்போது, இதோ நூறு ரூபாய் கொடுக்கிறேன்'' என்று கூறி, ரூ. 100 பாரதி நிதிக்குக் கொடுத்தார்.

– சின்ன அண்ணாமலை, சொன்னால் நம்ப மாட்டீர்கள், ப. 154.

27

'ஐயோ பாவம்! அகப்பட்டுக் கொண்டான்!'

"நான் சிறு பையனாயிருந்த போது எங்கள் ஊரில் ஒரு கலியாணம் நடந்தது. கலியாணத்தில் வழக்கமாயுள்ளது போல் மேடை தடபுடல் பட்டது. எங்கள் உபாத்தியாயர் 'அதோ மேளச் சத்தம் கேட்கிறதே, அது என்ன சொல்கிறது, யாருக்காவது தெரியுமா?' என்று கேட்டார். பிறகு அவரே சொன்னார்: "நன்றாய்க் கேளுங்கள். 'அகப்பட்டுக் கொண்டான், அகப்பட்டுக் கொண்டான்' என்று அது அலறுவது தெரியவில்லையா?" என்று.

அதாவது, "ஐயோ! பாவம்! ஒரு மனுஷன் அநியாயமாய்க் கலியாண வலையில் அகப்பட்டுக் கொண்டானே!" என்று அந்த மேளம் அலறுகிறதாம். இது ரொம்ப உண்மைதான். கலியாணத்தில் ஒருவன் தன் விடுதலையை இழந்து விடுகிறான். பெரும் பொறுப்பு அவன் தலையில் அமர்கிறது."

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'கலியாணம்', ஆனந்த விகடன், 16.2.1936.

28

அந்தக் காலத்தில் அதிகமாய் வழங்கி வந்த விகடத் துணுக்கு!

"நான் பள்ளிக்கூடத்தில் படிக்கத் தொடங்கிய காலத்தில், ஒரு விகடத் துணுக்கு அதிகமாய் வழங்கி வந்தது.

சுப்பன் சீனனைப் பார்த்து, 'அடே! உன் பெண்டாட்டி தாலி அறுத்தால், உனக்கு யாரடா சமைத்துப் போடுவாள்?' என்று கேட்டான்.

அதற்குச் சீனன், 'எங்க அத்தை எங்கே போனாள்? அவள் சமைத்துப் போடுவாள்' என்று பதில் சொன்னான்.

அந்த நாளில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளை மேற்கண்ட கேள்வி கேட்டு, அவர்கள் தட்டுக் கெடலாய்ப் பதில் சொல்வதைக் கண்டு சந்தோஷம் அடைவார்கள்.

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'கலியாணம்', ஆனந்த விகடன், 16.2.1936.

29

சகுனத்தின் பலன்!

"நான் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த போது என் சிற்றன்னையின் வீட்டில் சில நாள் இருக்க நேர்ந்தது. அந்த அன்னையின் புதல்வன் மணி என்பவன் இரண்டாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தான். ஒரு பையனாதலால் அன்னைக்குப் பிள்ளையிடம் அபார பிரேமை. இத்துடன் சகுனம் பார்ப்பதில் அந்த அம்மாளுக்கு விசேஷ பிரமையுண்டு. தினசரி பையன் பள்ளிக்கூடம் போகும்போது கூடச் சகுனம் பார்த்துத்தான் அனுப்பி வைப்பாள். வெறும் நாளிலேயே இப்படி யென்றால் பரீட்சையும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா? முதல் நாள் பையனுக்கு இங்கிலீஷ் பரீட்சை. எனக்கு விடுமுறை ஆதலால் வீட்டிலேயே இருந்தேன். சிற்றன்னை அன்று காலையில் அவசர அவசரமாக வீட்டுக் காரியங்களை முடித்துப் பையனுக்குத் தலை வாரிப் பின்னிக் குளிப்பாட்டி, சாதம் போட்டு உடை உடுத்து விட்டாள். இதற்குள் மணி பத்து ஆகிவிட்டது. பையனை உள்ளே இருக்கச் செய்து, வாசலில் வந்து பார்த்துவிட்டு, 'வா, வா! யாரும் வரவில்லை, ஓடிவா!' என்றாள் தாயார். ஆனால் பையனுக்குக் கொஞ்சம் சுறுசுறுப்பு அதிகம். அவன் வாசற்படிக்கு வருவதற்குள் 'உள்ளே போ, கொஞ்சம் தண்ணீர் சாப்பிடு!' என்று தாயார் கத்தினாள். நான் வாசலில் போய்ப் பார்த்த போது, விதவை ஒருத்தி சந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள். அடுத்த முறை பையன் கிளம்பும்போது ஒற்றைப் பிராமணர் ஒருவர் வந்தார். என் சிற்றன்னை பிராம்மணாபிமானம் நிரம்ப உள்ளவள் தான். ஆனால், அந்தப் பிராமணருக்கு அன்றைய தினம் அவள் கொடுத்த சாபங்களில் ஏதாவது பலித்தால் கூடப் போதும். அந்த மனிதருடைய உயிரை எந்த துரதிர்ஷ்டம் பிடித்த

கம்பெனியாவது இனிஷியூர் செய்திருந்தால், அது வாயில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ள வேண்டியது தான்.

இதற்குள் பத்து அடித்து இருபது நிமிஷம் ஆகி விட்டது. கடைசியாக, 'அப்பா, ஓடிவா! தண்ணீர்க் குடத்துடன் சுமங்கலி வருகிறாள், திவ்யமான சகுனம்' என்று தாயார் கூவினாள். பையன் அவசரமாகப் புறப்பட்டுச் சென்றான். சந்து திரும்பும் வரையில் மேற்படி சுமங்கலியைத் தவிர வேறு யாரும் எதிர்ப்படவில்லை. 'நல்ல பேஷான சகுனம். குழந்தை நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்குவான், பார்!' என்றாள் குதூகலத்துடன். எனக்கு மட்டும் கொஞ்சம் சந்தேகமாகவே இருந்தது. ஆனால், சகுனத்தின் பலன் இப்படியாகுமென்று நான் எதிர் பார்க்கவே இல்லை. கால் மணி நேரம் ஆனதும், பையன் போனது போலத் திரும்பி வந்து விட்டான். எங்களிருவருக்கும் தூக்கி வாரிப் போட்டது. 'என்ன? என்ன?' என்று இருவரும் ஏக காலத்தில் கேட்டோம். 'நான் போவதற்குள் மணி அடித்து 15 நிமிடம் ஆகிவிட்டது. ஆகையால் பரீட்சை எழுத விட மாட்டேன் என்று வாத்தியார் சொல்லிவிட்டார்!' என்றான் பையன். சிற்றன்னை கோபித்துக் கொள்வாள் என்று தெரிந்தும் என்னால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவேயில்லை."

– கல்கி, 'ஏட்டிக்குப் போட்டி', ஏட்டிக்குப் போட்டி, பக். 24–26.

30

‘புனைபெயர் வைத்துக் கொள்வதில் உள்ள அநுகூலம்!’

“எவரும் தாம் எழுதுவதைப் பிறர் படிக்க வேண்டுமென்று விரும்புவது இயல்பல்லவா? எனக்கும் அந்த ஆசை உண்டு. ஆனால் தலைப்பில் என் சொந்தப் பெயரைப் போட்டுக் கொண்டால் என்ன நேரிடுமென்று நினைக்கிறீர்கள்? முக்கால்வாசிப் பேர் ஏட்டைப் புரட்டி விட்டுப் போய்விடுவார்கள்.

ஒரு சிலருக்குப் பெயர் போட்டுக் கொள்வதில், உண்மையான அநுகூலம் உண்டு. உதாரணமாக திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் இவர்களைச் சொல்லலாம். இவர்கள் என்ன எழுதினாலும் படிப்பதற்குத் தனித்தனியே ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். ஒருவருடைய அபிமானிகள் மற்றவர்கள் பெயரைக் கண்டதும் தள்ளி விட்டுப் போய் விடலாமாயினும் ஒவ்வொருவருக்கும் குறைந்தது 5000 பேராவது படிப்பதற்கு இருக்கிறார்கள் என்பதில் சந்தேக மில்லை. ஆனால், என் போன்ற சாமானியர்களுக்கோ வென்றால்,.. என் ‘குட்டை’ நானே ஏன் உடைத்து விட வேண்டும்? உண்மையில் புனைபெயர் வைத்துக் கொள்வதிலுள்ள அநுகூலம் இதுதான்: பெயரைப் போட்டுக் கொண்டால் சாமானியனாகி விடுகிறேன். ஆனால் ‘கல்கி’ எவ்வளவு பெரிய மனிதராய்த்தான் இருக்கக் கூடாது; மகாவித்வானாயிருக்கலாம்; பண்டித சிரோமணியாயிருக்கலாம்; ஹைகோர்ட் ஜட்ஜாக இருக்கலாம்; மந்திரியாகக் கூட இருக்கலாம்; காங்கிரஸ் தலைவராயிருக்கலாம்; இன்னும் எவ்வளவோ பெரிய மனிதராயிருக்கலாம்; இவ்வளவு மகோன்னதமான பதவியை நான் ஏன் விட வேண்டும்?”

– கல்கி, ‘என் பெயர்’, ஏட்டிக்குப் போட்டி, பக். 93–94.

31

'எனக்கு ஞாபக சக்தி ரொம்ப அதிகம் உண்டு!'

"எனக்கு ஞாபக சக்தி ரொம்ப அதிகம் உண்டு என்பது நேயர்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். உதாரணமாக, எனக்குப் பெயர் வைத்து நாற்பது வருஷத்துக்கு மேல் ஆயிற்று. ஆயினும் என்னுடைய பெயரை இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேன்! என்னுடைய இளம் நண்பர் ஒருவர் எட்டு வருஷத்துக்கு முன்னால் பழக்கமானார். இரண்டாவது தடவை அவரைச் சந்தித்த போது 'என்ன மிஸ்டர் துரைசாமி! சௌக்கியந் தானே?' என்று கேட்டேன். 'சௌக்கியந்தான், ஆனால் என் பெயர் துரைசாமி இல்லை, முத்துசாமி!' என்று அவர் சொன்னார். அப்புறம் நூறு தடவைக்கு மேல் என்னுடைய ஞாபகத்தை அவர் மாற்ற முயன்றும் பயன்படவில்லை. கடைசியாக அந்த மனிதர் 'முத்துசாமி' என்று பெயர் எழுதிய அவருடைய பௌண்டன் பேனாவை என்னிடம் ஞாபகார்த்தமாகக் கொடுத்துவிட்டுப் போன பிறகு தான் பழைய 'துரைசாமி' என்ற பெயரால் அவரை அழைப்பதை நிறுத்தினேன்."

– கல்கி, அபலையின் கண்ணீர், ப. 3.

32

'இருந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே!'

ஸ்ரீரங்கபட்டணத்தில் (மைசூர் சமஸ்தானத்தின் தலைநகரத்தில்) பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று, 'கும்பஸ்' என்பது. அவ்விடத்தில் வெகு நேர்த்தியான ஒரு கட்டிடம் இருக்கிறது. அந்தக் கட்டிடத்திற்குச் சென்றதும், "இங்கே என்ன விசேஷம்?" என்று அந்தப் பையனைக் (வழிகாட்ட வந்தவனை) கேட்டேன். அவன், "இங்கே ஹைதர் அலி, திப்பு சுல்தான் இவர்களுடைய சமாதிகள் இருக்கின்றன" என்று சொல்லி உள்ளேயிருந்த சமாதிகளைக் காட்டினான்.

"சமாதிகள் இருக்கட்டும்; அவர்கள் எங்கே?"

"எவர்கள்?"

"ஹைதர் அலியும், திப்பு சுல்தானும்."

"அவர்கள் இறந்து போய்விட்டார்களே!"

"இறந்தா போய் விட்டார்கள்? ஐயோ பாவம்!"

என் கண்களில் நீர் வந்து விட்டது. பையன், "எதற்காக அழுகிறீர்கள் ஸார்?" என்று கேட்டான்.

"இவ்வளவு அழகான சமாதிகளை ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் இருந்து பார்க்கக் கொடுத்து வைக்க வில்லையே என்று தான்."

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'கொலுவும் கோவிலும்'

ஆனந்த விகடன், 11.8.1935.

III. கல்கி போற்றிய பெரியோர்கள்

33

'நம்புவதே கஷ்டந்தான்!'

தற்காலத்தில் உலகத்தில் வாழும் தலைசிறந்த தத்துவ ஞானிகளில் **ஐன்ஸ்டீன்** என்பவர் ஒருவர். அவர் காந்தியடிகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்:

'இத்தகைய ஒருவர் மானிட வடிவத்திலே வந்தார் என்றும் இந்தப் பூவுலகத்தில் அவர் நடந்தார் என்றும் இனிமேல் வரப்போகும் மானிட சந்ததிகள் நம்புவதே கஷ்டந்தான்!'

இவ்விதமாக வருங்காலச் சந்ததிகள் நம்புவதற்கரிய மகிமை பொருந்திய மகா புருஷர் பிறந்த நாட்டில் நாமும் பிறந்தோம். அவர் பாதம் பட்ட புண்ணிய பூமியில் நாமும் நடந்தோம். அவர் உயிர் வாழ்ந்த காலத்திலேயே நாமும் வாழ்ந்தோம்; அவரைக் கண் குளிரத் தரிசித்தோம். அவருடைய உபதேசங்களைச் செவி குளிரக் கேட்டோம். இந்தப் பாக்கியங்களுக்கெல்லாம் தகுதியுடையவர்கள் நாம் என்று நமது நடத்தையினால் நிரூபிப்போமாக.

– கல்கி, மகாத்மாவும் மகாகவியும், பக். 32–33.

34

‘காந்தி மகான் சித்திரம் எழுதிய திரை’

லண்டன் மாநகரிலே சித்திரம் எழுதுவதில் கை தேர்ந்த பெண்மணி ஒருவர் பாரத நாட்டின் மாபெரும் தலைவர் ஒருவருடைய உருவப் படத்தை வரைந்து கொண்டிருந்தார்.

அந்தப் பெண்மணியின் அழைப்புக்கு இணங்க நமது தலைவர் அவரது ஜாகைக்கு விஜயம் செய்தார். அப்போது அப்பெண்மணி தாம் எழுதிய உருவப் படத்துக்குக் கீழே கையெழுத்திட்டுத் தரும்படி பாரதத் தலைவரை வேண்டிக் கொண்டார்.

உலகமே வணங்கும் நமது தலைவரும் அதற்கு இசைந்தார். மேற்படி சித்திர நிபுணரின் கையில் இருந்த ‘பிரஷை’ வாங்கிக் கொண்டார்.

‘நானும் ஒரு சித்திரக்காரனே. நான் சித்திரம் எழுதும் திரை இந்தியாதான்’ என்ற வார்த்தைகளைப் பொறித்தார். அதன் கீழ் ‘எம்.கே. காந்தி’ என்றும் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

காந்தி சகாப்தத்துக்கு முன் பாரத நாடு இருந்த நிலையையும் காந்தி சகாப்தத்துக்குப் பிறகு அதாவது இன்றைய இந்தியாவின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களே காந்திஜியின் மேற்படி வார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மையை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இந்தியாவாகிற திரையில் காந்தி மகான் தீட்டியுள்ள படம் அகில உலகத்தையும் அதிசயிக்கும்படி செய்திருக் கிறது.

– கல்கி, மகாத்மாவும் மகாகவியும், பக். 43–44.

35

'இது முதல் தடவை அல்ல!'

சுவாமி விவேகானந்தர் அதிகமாகப் பிரசித்தி அடையாதிருந்த காலத்தில் தென்னிந்தியாவில் ரயில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய வண்டியில் இருந்த சில வெள்ளைக்கார ஸோல்ஜர்கள் இந்தியா நாட்டில் காவி உடுத்தித் திரியும் சன்யாசிகளைப் பற்றி நிந்தையாகப் பேசிக் கொண்டு வந்தார்கள். "இந்தியா தேசம் கெட்டுப் போவதே இந்தச் சாமியார்களினாலே தான்!" என்று தங்கள் முடிவான அபிப்பிராயத்தை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொண்டார்கள்.

சுவாமி விவேகானந்தர் இந்தச் சம்பாஷணையில் குறுக்கிடாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்று அந்த ஆங்கிலேயர்கள் எண்ணியிருந்தார்கள். சேலம் ரயில்வே நிலையம் வந்ததும் ஸ்டேஷன் மாஸ்டர், சுவாமி விவேகானந்தரை அடையாளம் தெரிந்துகொண்டு வந்து வணங்கினார். அவரிடம் ஆங்கிலத்தில் சுவாமிகள் பேசுவதை அந்த வெள்ளைக்காரப் பிரயாணிகள் கேட்டு ஆச்சரியம் அடைந்தார்கள். மறுபடியும் ரயில் புறப்பட்டதும், "சாமியாரே! உமக்குத் தான் ஆங்கிலம் தெரிந்திருக்கிறதே? நாங்கள் பேசிக்கொண்டு வந்ததை மறுத்து நீர் ஏன் ஒன்றும் சொல்லவில்லை?" என்று கேட்டார்கள். "முட்டாள்களை நான் சந்திப்பது இது முதல் தடவை அல்ல!" (This is not the first time that I meet fools) என்றார் சுவாமி விவேகானந்தர்.

– கல்கி, யார் இந்த மனிதர்கள் ?, பக். 223–224.

36

புழுதியிலே புரண்ட பாரதியார்!

பாரதியார் சில காலம் கடையம் என்னும் கிராமத்தில் தங்கியிருந்தார். அப்போது ஒரு தடவை எங்கேயோ போவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ரயில் ஏறினார். பெரும்பாலும் மெய் மறந்து பரவச நிலையில் உள்ளவராதலால், ரயில் ஏறும்போது காலைப் படியில் வைப்பதற்குப் பதிலாகப் பக்கத்தில் வைத்து விட்டார். தடால் என்று பிளாட்பாரத்தில் விழுந்தார்! அருகில் இருந்தவர்கள் எல்லோரும் 'ஐயோ! பாரதியார் விழுந்து விட்டாரே!' என்று அலறிப் புடைத்துக் கொண்டு அவரைத் தூக்க வந்தார்கள். 'தூக்காதே!', 'கிட்ட வராதே!' என்று ஆவேசம் வந்தவரைப் போல் கூவினார் பாரதியார். 'இது என்ன வம்பு!' என்று மற்றவர்கள் திகைத்து நிற்க, பாரதியார், மீண்டும் 'ஆஹா! இந்தப் புண்ணிய பூமியிலே படுப்பதற்கு, இந்தப் பாரத நாட்டின் புழுதியிலே புரள்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா? எத்தனை பெரியோர்கள், எத்தனை மகான்கள், எவ்வளவு கற்புக்கரசிகள், எவ்வளவு மகாகவிஞர்கள், கலைஞர்கள், அவதார புருஷர்கள் வாழ்ந்த தேசம் இது? இப்பேர்ப்பட்ட தாய் நாட்டின் மண்ணில் இன்னும் கொஞ்சம் புரண்டு விட்டு வருகிறேன். எல்லாரும் எட்ட நில்லுங்கள்!' என்று சொல்லிவிட்டு, அனைவரும் பார்த்திருக்க, அந்த ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் உண்மையிலேயே புரண்டாராம். ரயில் டிரைவரும் கார்டும் கூடப் பிரமித்துப் போய் நின்று, பாரதியார் எழுந்து வந்து ரயில் ஏறிய பிறகுதான் ரயிலை விட்டார்களாம்.

– கல்கி, பாரதி பிறந்தார், பக். 17–18.

37

திரு.வி.க.வைப் பற்றிய கல்கியின் அனுபவங்கள்

- ஒரு சமயம் திரு.வி.க.வை 'ராயப்பேட்டை முனிவர்' என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அரசியல் உலகம், பத்திரிகை உலகம், தொழிலாளர் உலகம் - ஆகிய மூன்று சங்கடமான உலகங்களில் சஞ்சரித்த போதிலும், அவருடைய சொந்த வாழ்க்கை முனிபுங்கவரின் உத்தம வாழ்க்கையாகவே இருந்தது.

- 'பெண் தெய்வங்கள்' என்ற சொற்றொடரை முதன் முதல் திரு.வி.க. தான் உபயேகப்படுத்தினார் என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டிலுள்ள அத்தனை பெண்களையும் திரு.வி.க. அத்தனை தெய்வங்களாகவே கண்டார்.

- 'நவசக்தி'யில் நான் ஏறக்குறைய நாலு வருஷம் வேலை பார்த்தேன். இந்த நாலு வருஷத்தில் திரு.வி.க. ஒரு தடவையாவது ஒரு வார்த்தையாவது கடிந்து பேசிய தில்லை; முகத்தைச் சிணுக்கியது கூடக் கிடையாது.

- திரு.வி.க.வைப் பற்றிய என்னுடைய அனுபவங்களை யெல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொண்டு, 'அவர் எப்பேர்ப்பட்ட மனிதர்?' என்று சிந்தனை செய்தேன். அவருடைய குணாதிசயங்களுக்குள்ளே என் ஞாபகத்தில் மேலோங்கி நிற்பது, 'அவர் எவ்வளவு நல்லவர்!' என்பதேயாகும். இந்த உலகத்தில் ஒரு மனிதன் பெறக்கூடிய பேறு இதைக் காட்டிலும் வேறு என்ன இருக்கிறது?

– **கல்கி, பாரதி பிறந்தார், பக். 51,53,54,59.**

38

உ.வே.சா.வுக்குக் கல்கி சூட்டிய பட்டம்!

மகாமகோபாத்தியாய, டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருக்குத் 'தமிழ்த் தாத்தா' என்ற சிறப்புப் பட்டத்தை - மரியாதை அடைமொழியைச் சூட்டியவர் கல்கி. உ.வே.சா.வின் எண்பதாண்டு நிறைவை ஒட்டி 1935-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் 'ஆனந்த விகடன்' இதழில் வெளியிட்ட சிறப்பு மலரில் கல்கி 'விகடன்' என ஒப்பம் இட்ட மூன்று கடிதங்களை ஒரு கோவைத் தலையங்கமாய் எழுதினார். அவற்றுள் உ.வே.சா.வுக்குத் 'தமிழ்த் தாத்தா' பட்டம் சூட்டிக் கல்கி எழுதிய சிறப்பான கடிதம் இதோ:

"தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் சமூகத்துக்குப் பேரன் பரிவுடன் எழுதிக்கொள்வது.

பெரியவர்கள் என்ன யோசிக்கிறீர்கள்? இது என்ன புதிய பட்டமாக இருக்கிறது, இவன் யார் கொடுப்பது என்றா? அப்படியெல்லாம் தாங்கள் நிராகரிக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். சகலமும் அறிந்த பெரியாராகிய தாங்கள் நான் அளித்திருக்கும் பட்டத்தின் பொருத்தத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது. முதலாவது, ஔவையாருக்கு எப்படித் 'தமிழ்ப் பாட்டி' என்னும் பட்டம் பொருந்துமோ அது போலவே, தங்களுடைய பிராயத்தினாலும், தமிழுக்குத் தாங்கள் செய்திருக்கும் தொண்டினாலும் 'தமிழ்த் தாத்தா' என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

இரண்டாவதாக, மேற்படி பட்டத்திலுள்ள இரண்டு 'த்'களையும் நீக்கிவிட்டால், தாங்கள் 'தமிழ் தாதா' ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக்கத்தை அனுசரித்து, அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து

வைக்காமல் அச்சிட்டு வெளியாக்கிப் பதினாயிரக் கணக்கானவர் களுக்குப் பயன்படும்படி செய்த தங்களைத் 'தமிழ் தாதா' என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல்வது?

மூன்றாவது, 'உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும்' என்பது போல் தமிழன்பர்கள் இன்னமும் தங்களை நோக்கித் 'தமிழ் தா! தா!', 'தமிழ் நூல்களைத் தா! தா!' என்று கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆகவே, இவ்வளவு பொருத்தமான பட்டத்தைத் தாங்கள் அங்கீகரித்தே தீர வேண்டும். அப்படி அங்கீகரிக்காவிட்டாலும் நான் என்னமோ அந்தப் பட்டத்தால்தான் தங்களை அழைப்பேன். ஏனென்றால், 'மகோமகோபாத்தியாய', 'தாக்ஷிணாத்ய கலாநிதி' முதலியவை வாயில் நுழைவதே கடினமாயிருக்க, 'தமிழ்த் தாத்தா' என்பதோ தங்களுடைய தமிழ் வசன நடையைப் போல் எளிதாயிருக்கிறது."

– சுந்தா, பொன்னியின் புதல்வர், பக். 306–307.

க.4.

39

அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரின் பொறுமை!

ஒரு சமயம் சென்னையில் உள்ள பிரபல வக்கீல் ஒரு பெரிய வழக்கையொட்டி வெள்ளையரான ஹைகோர்ட் நீதிபதியின் முன்னிலையில் வாதித்துக் கொண்டிருந்தார். அவ்வழக்குச் சம்பந்தமான நுட்பமான விவரங்களைப் பொறுமையுடன் கவனித்துக் கேட்க வேண்டிய நீதிபதி பொறுமையைக் காற்றுவாக்கில் விட்டுவிட்டார்.

‘தோற்றுப் போகும் ஒரு வழக்கையொட்டி ஏன் இப்படித் தொண்டைத் தண்ணீர் வறண்டு போகக் கத்துகிறீர்கள்? என்று வக்கீலைப் பார்த்துக் கடிந்து கொண்டார்.

அந்தப் பிரபல வக்கீல் பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். தம்முடைய மேதையினாலும் சலியா உழைப்பினாலும் வாதத் திறமையினாலும் வக்கீல் வேலைக்கு வந்து சீரும் சிறப்பும் செல்வப் பெருக்கும் அடைந்தார்.

‘நீதிபதி அவர்களே! தாங்கள் கூறுவது முற்றிலும் தவறு. சென்ற முப்பது வருஷங்களுக்கு மேலாகச் சிக்கலான எத்தனையோ பெரிய வழக்குகளில் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறேன்! இந்தியாவில் உள்ள மிகச் சிறந்த வக்கீல்களில் ஒருவன் என்ற புகழையும் நான் அடைந்திருக்கிறேன். ஆனால் ஒரு விதத்தில் என்னைத் துரதிர்ஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும். உங்களைப் போன்ற பொறுமையற்ற, அவசர புத்தி படைத்த ஒரு நீதிபதியின் முன்னிலையில் வ்ழக்கை வாதிக்கும்படியான நிர்ப்பந்தம் இன்றைக்கு எனக்கு ஏற்பட்டிருக்கிறது அல்லவா?’

இவ்விதம் அந்தப் பிரபல வழக்கறிஞர் கூறியிருந்தால் கூட அது நியாயமான, உண்மையான, பொருத்தமான பதிலாக இருந்திருக்கும்.

ஆனால் அந்த அறிஞர் அவ்விதம் கூறவில்லை. அதே அர்த்தம் தொனிக்கும்படி மரியாதையாகவும் சுருக்கமாகவும் பொறுமையுடனும் ஒரே வார்த்தையில் கூறிவிட்டார்!

'நீதிபதி! என் செய்வது? என்னுடைய துர்ப் பாக்கியம், சென்ற முப்பது வருஷங்களுக்கு மேலாகத் தோற்றுப் போகும் வழக்குகளுக்காகவே கத்துவது எனக்கு வழக்கமாகி விட்டது!' என்று பளிச்சென்று பதில் அளித்தார்.

இதைக் கேட்டதும் நீதிபதியின் முகம் சுருங்கியது. அவர் பதட்டத்தினால் தாம் செய்த பெரும் தவறை உணர்ந்தார்.

சென்ற வாரம் தமது எழுபதாவது வயதில் இப்பூவுலகிலிருந்து மறைந்த சட்ட மேதை ஸ்ரீ அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சிறு சம்பவம் தான் அது.

– கல்கி, யார் இந்த மனிதர்கள் ?; பக். 188–189.

40

நாதஸ்வர சக்கரவர்த்தி

நாதஸ்வர சக்கரவர்த்தி திருவாவடுதுறை ராஜ ரத்தினம் பிள்ளை பற்றிய நடைச் சித்திரத்தைக் கல்கி தொடங்கியுள்ள பாங்கு, பயில்வோர் நெஞ்சை அள்ளும் நயமும் அழகும் பொருந்திய ஒன்றாகும். கல்கியின் கலைவண்ணத்திற்குக் கட்டியம் கூறும் அப்பகுதி இதோ:

"தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நெடுங்காலம் நடந்து வந்த போர்களைக் குறித்துக் கேள்விப்பட்டி ருப்பீர்கள்.

அதே மாதிரியாக ஸ்வரங்களுக்கும் அபஸ்வரங்களுக் கும் நீடித்த பெரிய யுத்தம் ஒரு காலத்தில் நடந்தது. இந்த யுத்தத்தில் அபஸ்வரங்களின் கட்சி ஜயித்து விடுமோ என்று ஒரு சமயம் பீதியுண்டாயிற்று. ஏனெனில் ஸ்வரங்களின் சைன்யம் கணக்குக்கும் வரையறைக்கும் உட்பட்டது. இத்தனை வீரர்கள்தான் என்று எண்ணிவிடலாம். அந்த வீரர்கள் இன்னின்ன ஸ்தானத்திலே நிற்க வேண்டும் என்ற வரையறையும் இருந்தது. ஆனால் அபஸ்வரங்களின் சைன்யமோ இராவணனுடைய மூல பலத்தைப் போல அளவிட முடியாத எண்ணிக்கை கொண்டதாயிருந்தது. புற்றிலிருந்து கிளம்பும் ஈசலைப் போல அபஸ்வர சேனா வீரர்கள் முடிவில்லாமல் வந்து கொண்டிருந்தார்கள். வரையறை, ஒழுங்கு, கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் நினைத்த நினைத்த வேளைகளிலெல்லாம் கிளம்பிக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் புகுந்து தாக்கினார்கள். ஸ்வரங்களின் பாடு மிக ஆபத்தாய்ப் போய்விட்டது. இந்தப் பூவுலகத்திலிருந்து அடியோடு அழிந்து போக வேண்டியதாக நேருமோ என்று ஸ்வரங்கள் பீதியுற்றுத் தங்களுடைய தாயாகிய சங்கீத தேவதையிடம் சென்று

முறையிட்டன. சங்கீத தேவதையும் அபஸ்வரங்கள் படுத்திய பாட்டினால் மிகவும் நொந்து போயிருந்தாள். 'வாருங்கள்; குழந்தைகளே! நாதப் பிரம்மமாகிய நம் இறைவனிடம் போய் முறையிடுவோம்!' என்று ஆறுதல் சொல்லி அழைத்துப் போனாள். நாதப் பிரம்மத்தின் சந்நிதிக்குச் சென்று சங்கீத தேவதையும் அவளுடைய குழந்தைகளாகிய ஸுஸ்வரங்களும் முகாரி ராகத்தில் தங்களுடைய சோகக் கதையைச் சொல்லிப் புலம்பினார்கள். அதனால் மனமிரங்கிய நாதப் பிரம்மம் தமது சந்நிதானத்தில் நின்ற வீரர்களில் சிலரைப் பார்த்து, "நீங்கள் பூவுலகத்தில் போய்ப் பிறந்து அபஸ்வரங்களைச் சதம் செய்து ஸ்வரங்களின் ஆட்சியை நிலைநாட்டி வாருங்கள்!' என்று அருள்புரிந்தார்.

அவ்வாறு நாதப் பிரம்மத்தின் கட்டளைக்கு உட்பட்டுப் பூலோகத்தில் பிறந்த கான வீரர்களில் ஒருவர் 'கல்கி'யின் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறார். அந்த கான வீரரின் பெயர் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை."

– கல்கி, யார் இந்த மனிதர்கள் ?, பக். 104–105.

41

அதிசய மனிதர் அழகப்பர்

டாக்டர் அழகப்பச் செட்டியார் ஒரு அதிசய மனிதர். அவர் பம்பாய்க்கு ஒரு தடவை போயிருந்தார். மேனாட்டு முறையில் நடத்தப்பட்ட ஹோட்டலுக்குச் சென்றார். "தங்குவதற்கு அறை வேண்டும்" என்று கேட்டார். அழகப்பச் செட்டியாரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மேற்படி ஹோட்டல் மேனேஜர், "அறை காலி இல்லை" என்றான். "நன்றாய்ப் பார்த்துச் சொல்!" என்றார் அழகப்பச் செட்டியார். "பார்த்துத்தான் சொல்கிறேன்" என்றான் மானேஜர். "இந்த ஹோட்டலில் எத்தனை அறைகள் இருக்கின்றன?" என்று அழகப்பச் செட்டியார் கேட்டார் "நீர் என்ன ஹோட்டலை விலைக்கு வாங்கப் போகிறீரா?" என்று மானேஜர் கேட்டான். "ஆமாம், விலைக்கு வாங்கத் தான் போகிறேன்! என்ன விலை?" என்று அழகப்பச் செட்டியார் கேட்டார். லட்சக் கணக்கில் ஏதோ ஒரு தொகையை அவன் சொன்னான். "சரி, இப்போதே அட்வான்ஸ் வாங்கிக் கொள்!" என்றார் அழகப்பச் செட்டியார்.

மானேஜர் திகைத்துப் போனான். கடைசியில் அந்த 'ரிட்ஸ்' ஹோட்டலை டாக்டர் அழகப்பச் செட்டியார் விலைக்கு வாங்கியே விட்டார்!

– கல்கி, யார் இந்த மனிதர்கள்?, ப. 43.

42

'மலை மறைந்தது!'

பல்வேறு துறைகளில் நாட்டிற்கும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் அரிய தொண்டு ஆற்றி, சாதனை படைத்துப் பெரும்புகழ் பெற்ற 41 பேரைப் பற்றிய 'பேனாச் சித்திரங்'களை 'யார் இந்த மனிதர்கள்?' என்ற தலைப்பில் எழுத்தாளர் கல்கி ஓர் அருமையான நூலாக வெளியிட்டுள்ளார். பதச் சோறாக, 'மலை மறைந்தது' என்னும் தலைப்பில் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரைப் பற்றிக் கல்கி எழுதியுள்ள பேனாச் சித்திரத்தின் கடைசிப் பகுதி இதோ:

"திடீரென்று ஒரு நாள் நீலகிரி மலை மறைந்து போய் விட்டதென்றால் நமக்கெல்லாம் எப்படியிருக்கும்? அந்த மாமலை இருந்த இடத்தை வேறு எந்தப் பொருளையாவது இட்டு நிரப்ப முடியுமா? ஒரு நாளும் முடியாது. மலை இருந்த இடம் வெகு காலத்துக்கு வெறிச்சென்று தானிருக்கும்.

ராஜா ஸர் அவர்கள் இல்லாத தமிழ்நாடும் தமிழர் சமூகமும் இன்னும் வெகுகாலத்துக்கு அவர்கள் இல்லாமற் போன குறையை உணர வேண்டியிருக்கும்."

– கல்கி, யார் இந்த மனிதர்கள் ?, ப. 33.

IV. கல்கி கையாண்டுள்ள குட்டிக் கதைகளும் வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புக்களும்

43

'ஈயச் சட்டி காலியாகி விட்டது!'

ஒரு பையனுக்குக் கலியாணம் ஆயிற்று; மனைவி வீட்டுக்கு வந்தாள். ஆயினும் தாயாரிடம் அவனுக்கிருந்த பயபக்தியினால் மனைவியுடன் பேசுவதற்குக்கூடத் துணிச்சல் ஏற்படுவதில்லை; அதற்குச் சந்தர்ப்பமும் அவனுக்குக் கிடைப்பதில்லை. இப்படிப் பல தினங்கள் சென்றன. ஒரு நாள் இரவு பையன் சற்று நேரம் கழித்து வீட்டிற்கு வந்தான். தாயாருக்கு உடம்பு தள்ளவில்லை. படுத்துக் கொண்டு விட்டாள். "அப்பா, குதிர் இடுக்கில் சாதம் எடுத்து வைத்திருக்கிறேன். அவளையே போடச் சொல்லிச் சாப்பிடு" என்றாள். பையன் கிராக்கி பண்ணிக் கொண்டான். "உன் கையால் போட்டால் தான் அம்மா, எனக்கு வயிறு நிறைந்தாப் போல் இருக்கும்" என்றான். "இல்லையடா, அப்பா! இன்று ஒருநாள் அவள்

போடட்டும்; நாளைக்கெல்லாம் நான் போடுகிறேன்'' என்றாள்.

சமையலறையில் சென்று இலையில் உட்கார்ந்தான். எத்தனை நாளைய மனோரதம் இன்று நிறைவேறுகிறது! அதை நன்கு அனுபவிக்க வேண்டாமா? "சாதத்தைக் கையிலேயே போட்டுவிடு'' என்றான். மனைவி, ஈயச் சட்டியில் மாமியார் எடுத்து வைத்திருந்த பழைய சாதத்தைக் கொண்டு வந்து பிடிபிடியாய் எடுத்து, உள்ளங் கையில் போட்டாள். ஒவ்வொரு பிடியுடனும் அவன் மனைவியின் முகத்தின் அழகையும் சேர்த்து அருந்தினான். வழக்கத்தைவிட இரண்டு மடங்கு அதிகம் சாப்பிட்டான். ஈயச் சட்டி காலியாகி விட்டது.

மறுநாள் காலையில் தாயார் எழுந்து எருமை மாட்டுக்குப் பருத்திக் கொட்டை ஊற வைத்திருந்த ஈயச் சட்டியை எடுத்தாள். அது காலியாகி இருக்கவே திடுக்கிட்டாள். இன்னொரு ஈயச் சட்டியைப் பார்த்தாள். அதில் சாதம் அப்படியே இருந்தது. கணவனைத் தனியாகக் கண்ட மகிழ்ச்சியில் அந்த இளம்மனைவி பழையது வைத்திருந்த சட்டிக்குப் பதிலாகப் பருத்திக் கொட்டைச் சட்டியைக் கொண்டு வந்து விட்டாள்! அதே சந்தோஷத்தினால், பையனும் அவ்வளவு பருத்திக் கொட்டையையும் சாப்பிட்டு விட்டான்!

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'கலியாணம்', ஆனந்த விகடன், 16.2.1936.

க.S.

44

'நான் படித்தது பச்சைப் புத்தகம்!'

பட்டிக்காட்டு மாப்பிள்ளை ஒருவன் மாமனார் வீட்டுக்குப் போனான். 'மாப்பிள்ளை படித்தவர்' என்பதாக மாமனாருடைய ஊரில் ஒரு வதந்தி பரவியிருந்தது. மாப்பிள்ளைக்கு முதல் மரியாதைகள் நடந்த பிறகு மாமனார் வீட்டு ஜனங்கள் அவரைப் படிக்கச் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். மைத்துனன் ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து அவர் கையில் கொடுத்தான். 'மாப்பிள்ளை! உங்களுக்குப் படிக்கத் தெரியுமாமே? இந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் படித்துக் காட்டுங்கள்! எல்லாரும் கேட்க ஆசைப்படுகிறார்கள்!' என்றான். 'எல்லாரும்' என்பதில் முக்கியமாக மாப்பிள்ளையின் மனைவியும் சேர்ந்தவள்தான்!

மாப்பிள்ளை ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படித்து எத்தனையோ நாள் ஆயிற்று. எழுத்துக்கள் ஏதோ பூர்வ வாசனை மாதிரி பூச்சி படர்ந்தது போல் தோன்றின. 'என்னடா இது தர்ம சங்கடம்?' என்று யோசித்தான். ஒரு யுக்தி கண்டுபிடித்தான். புத்தகத்தை வாங்கி முன்னாலும் பின்னாலும் திருப்பிப் பார்த்தான். 'நான் எங்களூரில் படித்தது பச்சை அட்டை போட்ட புத்தகம்! இது நீல அட்டை புத்தகமாயிருக்கிறதே! இதைப் படிக்க இயலாது!' என்று திருப்பிக் கொடுத்து விட்டான்.

இந்தப் பட்டிக்காட்டு மாப்பிள்ளையின் நிலைமைக்குத்தான் நமது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் லட்சக்கணக்கான சிறுவர் - சிறுமிகள் சில வருஷ காலத்தில் வந்து விடுவார்கள்!

– கல்கி, திருமகளும் கலைமகளும், பக். 145–146.

45

‘ஆகா! என்ன வாசனை!’

“இல்வாழ்க்கையில் இப்போதுள்ள சங்கடங்களை யெல்லாம் சொல்லிவிட்டு ‘விவாகம் செய்து கொள்ளுங்கள்’ என்று நான் முடிப்பதைப் பார்க்கும் பொழுது, உங்களுக்கு ஒரு கதை ஞாபகம் வரலாம். கிராமவாசிகள் நால்வர் கூத்துப் பார்க்கப் புறப்பட்டார்கள். வீதியில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. பிள்ளையாரிடமிருந்து கமகமவென்று வாசனை வீசிற்று. ‘நாமும் கொஞ்சம் வாசனை பூசிக்கொண்டு போகலாம்’ என்று கிராமவாசிகளில் ஒருவன் பிள்ளையார் தொப்புளில் விரலை விட்டான். அங்கே குடியிருந்த தேள் அவன் விரலில் கொட்டி விட்டது. அந்த விரலை அவன் முகர்ந்து பார்த்து, ‘ஆகா! என்ன வாசனை!’ என்று கூவினான். இன்னொருவன் தொப்புளில் விரலை விட்டான். அவனையும் தேள் கொட்டிற்று. அவனும் அவ்வாறே பாசாங்கு செய்ய, இம்மாதிரி நாலு பேரையும் தேள் கொட்டி விட்டது.

என்னுடைய யோசனையும் இதுபோல் தானோ என்று உங்களுக்குத் தோன்றக் கூடும். உண்மை அப்படியன்று; பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கலியாணம் செய்து வைப்பதில் அவ்வளவு கவலை காட்டுகிறார்களே, ஏன்? தாங்கள் அனுபவித்த துன்பத்தை அவர்களும் அனுபவிக்க வேண்டுமன்றா? ஒருநாளுமில்லை.

விவாக முறையில் எவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும், இல்வாழ்க்கைதான் ஜீவர்களுடைய இயற்கை. இல்வாழ்க்கையில்தான் மனிதனுடைய வாழ்வு பூரணமா கிறது.”

– ‘கல்கி’ வளர்த்த தமிழ், ‘கலியாணம்’, ஆனந்த விகடன், 16.2.1936.

46

'போடு இவனைக் கொடிய நரகத்தில்!'

மூன்று மனிதர்களுடைய ஆவிகள் ஒரே சமயத்தில் யமனுடைய சந்நிதானத்தை அடைந்தன. முதல் ஆவி பூலோகத்தில் பிரம்மச்சாரியாகவே இருந்து இறந்தவனுடையது. அவனைப் பற்றிய விவரம் சித்திரகுப்தன் அறிவித்ததும், யமன் "இவன் பூலோகத்திலே கஷ்டமே அனுபவியாதவன்; ஆகையால் இவனை இங்கே நரகத்தில் போடு" என்றான். அடுத்த ஆவி ஒரு கிரகஸ்தனுடையது. "ஐயோ, பாவம்! உலகத்திலே கலியாணம் செய்து கொண்டு வெகு கஷ்டப்பட்டிருக்கிறான். இங்கேயாவது, சுகமாயிருக்கட்டும். சொர்க்கத்திற்கு அனுப்பு" என்றான் யமன். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மூன்றாவது ஆவி, "யமதர்ம ராஜனே! நான் பூலோகத்தில் இரண்டு தடவை கலியாணம் செய்து கொண்டு ரொம்பக் கஷ்டங்களை அனுபவித்தவன்" என்று முறையிட்டது. உடனே யமன் வெகு கோபத்துடன், "அடே முட்டாள்! ஒரு தடவை கலியாணம் செய்து கொண்டு கஷ்டப்பட்ட பின், இரண்டாம் தடவையும் கலியாணம் செய்து கொண்டாயா? இப்படிப்பட்ட மூடனுக்குச் சொர்க்கத்தில் இடம் ஏது? போடு இவனைக் கொடிய நரகத்தில்!" என்று கட்டளையிட்டான்.

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'கலியாணம்', ஆனந்த விகடன், 16.2.1936.

47

புத்திசாலித் தகப்பனார்!

"ஒரு மனிதருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இதையறிந்த சிநேகிதர் ஒருவர் வந்து தமது அநுதாபத்தைத் தெரிவித்தார். 'உமக்குக் கூச்சல் என்றால் பிடிக்காதே? இரண்டு குழந்தைகளும் சேர்ந்து கூச்சல் போட்டால் பெருந் தொல்லையாயிருக்குமே?' என்று கேட்டார். 'அதுதான் இல்லை! ஒற்றைக் குழந்தையாக இருந்தால்தான் கூச்சல் தொந்தரவு. இரண்டு குழந்தைகள் சேர்ந்து கூச்சலிடும் போது ஒன்றின் கூச்சல் இன்னொன்றின் கூச்சலில் மறைந்து விடும் அல்லவா?' என்று சொன்னார் இரட்டைக் குழந்தையின் புத்திசாலித் தகப்பனார்."

– கல்கி, இலங்கையில் ஒரு வாரம், ப. 48.

48

'...மற்றபடி நீர் எழுதியிருப்பது முற்றிலும் சரி!'

"தமிழ்ப் பண்டிதர் ஒருவர் ஒரு புதிய அகராதி தயாரித்தார். அதில் நவீன வார்த்தைகளை யெல்லாம் புகுத்த எண்ணிய அவர், 'கங்காரு' என்பதற்கு 'ஆப்பிரிக்கா தேசத்து ஆறுகளில் பின்புறமாய் நீந்திச் செல்லும் ஒருவிதப் பறவை' என்று பொருள் எழுதினார். பின்னர் ஆங்கிலந் தெரிந்த நண்பர் ஒருவருக்கு அதைக் காட்டி 'சரிதானா?' என்று கேட்டார். 'நண்பரே! கொஞ்சம் தவறிருக்கிறது. கங்காரு ஆப்பிரிக்கா தேசத்தில் உள்ளதன்று; அது நீரில் வசிப்பதன்று; அது பின்புறமாய் நீந்துவதன்று; அது பறவையன்று. மற்றபடி நீர் எழுதியிருப்பது முற்றிலும் சரி' என்றார் நண்பர்."

– கல்கி, 'மதிப்புரை', ஏட்டிக்குப் போட்டி, ப. 183.

49

'இங்கே சட்டம்தான் உண்டு!'

சாது மனிதன் ஒருவன் வெளியூர் கோர்ட் ஒன்றில் நீதிபதியைப் பார்த்து, "எஜமானே! நீதி வழங்க வேண்டும்" என்று முறையிட்டான். நீதிபதி கொஞ்சம் நகைச்சுவை யுள்ளவர். அவர் உடனே, "இங்கே நீதி கிடையாது அப்பனே, நீதி கிடையாது; சட்டம் தான் உண்டு" என்று பதில் கூறினார்.

– கல்கி, 'சட்டம் ஒரு கழுதை', ஏட்டிக்குப் போட்டி, ப. 64.

50

'கை மேல் கிடைத்த பலன்!'

வைகறைப் போதில் இரட்டைக் காக்கையைக் கண்டால் நல்ல சகுனமென்று ஓர் இராஜாவுக்கு யாரோ சொன்னார்களாம். அவ்வரசன் தன் சேவகன் ஒருவனைக் காலையில் இரட்டைக் காக்கை உட்கார்ந்திருக்குமிடம் பார்த்து வந்து சொல்லும்படி கட்டளையிட்டான். அவ்வாறே அச்சேவகன் ஒரு நாள் காலையில் ஜோடிக் காக்கைகளை ஓரிடத்தில் கண்டு ஓட்டமாக ஓடிவந்து அரசனிடம் தெரிவித்தான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இராஜா போவதற்குள் காக்கை பறந்து போய்விட்டது. அரசன் கோபங் கொண்டு சேவகனை நையப் புடைத்தான். அடிபட்ட சேவகன் இராஜாவைப் பார்த்து, "அரசே! வைகறையில் இரட்டைக் காக்கை பார்த்ததற்கு எனக்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது" என்றான். அரசன் வெட்கிப் போய்ச் சேவகனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

– கல்கி, 'ஏட்டிக்குப் போட்டி', ஏட்டிக்குப் போட்டி, ப. 26.

51

'உலக வழக்கம்?!'

ஒரு ஊரில் ஒரு போக்கிரியை ஏழெட்டுப் பேராகச் சேர்ந்து அடித்து விட்டார்கள். அவன் போக்கிரியாக இருந்தாலும், அவர்கள் அடித்தது தவறுதான் அல்லவா? எனவே, அவர்கள் மேல் கோர்ட்டில் வழக்கு நடந்தது. குற்றவாளிகளில் ஒருவரை, "ஏன் அடித்தாய்?" என்று மாஜிஸ்ட்ரேட் கேட்டார். அதற்கு அந்த மனுஷர், "நான் தெருவோடு வந்து கொண்டிருந்தேன். இந்த ஆளை ஏழெட்டுப் பேராகச் சேர்ந்து அடித்துக் கொண்டிருந்தார்கள். அது **உலக வழக்கமாக்கும்** என்று நினைத்து, நானும் இரண்டு அடி போட்டேன்!" என்றாராம்.

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'இலங்கை அரசாங்கம்',
ஆனந்த விகடன், 19.6.1938.

52

காளி தேவியும் தென்னாலிராமனும்

புவன மாதாவாகிய காளிதேவியைக் குறித்துத் தென்னாலிராமன் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்தான். கடைசியில் மாதா கருணை கூர்ந்தாள். தனது ஆயிரம் சிரங்களுடனும் ஈராயிரம் கரங்களுடனும் பிரசன்னமானாள். அத்தோற்றத்தைக் கண்டதும் தென்னாலிராமன் முகத்தில் புன்னகை உண்டாயிற்று. புன்னகை விரைவில் பெருநகையாயிற்று. ஆன மட்டும் அடக்கிப் பார்த்தும் முடியவில்லை. குப்பென்று சிரிப்பு மீறிக்கொண்டு வந்தது. கலகலவென்று சிரித்தான்.

மாதா கோபங் கொண்டாள். தன் வடிவத்தைக் கண்டதும் தென்னாலிராமன் பயபக்தியுடன் பேசவும் நாவெழாமல் திகைத்து நிற்பான் என்று தாய் எண்ணியிருந்தாள். "அடா! ஏன் சிரிக்கிறாய்; உடனே சொல்!" என்று கேட்டாள்.

"அம்மா, மன்னிக்க வேண்டும். ஒரே மூக்குடன் கூடிய எனக்கு ஜலதோஷம் வந்த போது, நான் பட்ட பாடு சொல்லத் தரமன்று. உயிரை விட்டு விடலாமா என்று நினைத்தேன். ஆயிரம் மூக்குள்ள உனக்கு ஜலதோஷம் வந்தால் என்ன செய்வாய் என்று நினைத்தபோது எனக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. நீ உயிரைக் கூட விட முடியாதே!" என்றான் தென்னாலிராமன்.

காளி மாதா கோபங் கொண்டாள். "பார்த்தாயா, இவன் நம்மைப் பரிகாசம் செய்தான்?" என்று நினைத்தாள். "நீ **விகடகவி**யாகப் போகக் கடவது" என்று சாபம் கொடுத்தாள்.

தென்னாலிராமன் மறுபடியும் சிரித்தான். தேவி மீண்டும் சிரிப்புக்குக் காரணம் கேட்டாள்.

"அம்மா! நீ கொடுத்த வரத்தை நினைத்துச் சிரித்தேன். முதலிலிருந்து படித்தாலும் **விகடகவி**; பின்னாலிருந்து படித்தாலும் **விகடகவி**" என்றான்.

மாதா மகிழ்ச்சி கொண்டாள். "நீ அரண்மனை விகடகவியாகக் கடவாய்" என்று வரம் கொடுத்து அந்தர்த்தானமானாள்.

– 'கல்கி' வளர்த்த தமிழ், ஹாஸ்ய விபத்துக்கள்',
ஆனந்த விகடன், 1.12.1932.

53

தென்னாலிராமன் வரைந்த சித்திரம்

தென்னாலிராமன் கதையொன்று நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம், இராஜா, தன் சபைக்கு வந்த பெயர் பெற்ற சித்திரக்காரன் ஒருவனைக் கொண்டு அரண்மனைக் கொலு மண்டபத்தில் சித்திரம் எழுதுவித்தார். வேலை முடிந்த பின்னர் ஒருநாள் இராஜாவும் மற்றவர்களும் சித்திரம் பார்க்கச் சென்றார்கள். முதலில் பிள்ளையார் உருவம் எழுதியிருந்தது. "இது என்ன?" என்று கேட்டான் தென்னாலிராமன். "தெரியவில்லையா? இவர்தான் பிள்ளையார்" என்றார் இராஜா. "பிள்ளையாருக்கு முதுகு எங்கே?". என்றான் தென்னாலிராமன். "முதுகு பின்னா லிருப்பதாகப் பாவனை" என்றார் இராஜா. பின்னர் தென்னாலிராமன் கொஞ்ச காலம் எங்கேயோ போய் இருந்துவிட்டுத் திரும்பி வந்தான். தான் சித்திரம் எழுதக் கற்றுக்கொண்டு வந்திருப்பதாகவும், ஒரு மண்டபமும், செலவுக்குப் பணமும் கொடுத்தால் சித்திரம் எழுதித் தருவதாகவும் கூறினான். இராஜா அவ்வாறே செய்தார். சில நாள் கழித்துத் தென்னாலிராமன் இராஜாவைச் சித்திரம் பார்க்க அழைத்துக் கொண்டு போனான். மண்டபம் முழுவதும் ஆங்காங்கு விளக்குமாற்றைச் சாயத்தில் தோய்த்து அடித்திருப்பது போல் காணப்பட்டதைக் கண்டு இராஜா மிகவும் கோபங்கொண்டார். "என்னடா இது அக்கிரமம்?" என்றார். "அக்கிரமம் என்ன? சித்திரத்தைப் பாருங்கள்" என்றான் இராமன். "சித்திரமா? எங்கே இருக்கிறது?" என்று அரசர் கேட்டார். "நெடுகிலும் தான் இருக்கிறது. இதோ என் குதிரையின் படம்" என்றான் இராமன். "என்ன உளறுகிறாய்?" "உளறல் ஒன்றுமில்லை, இது குதிரையின் வால்!" என்றான். "குதிரையின் உடம்பு, முகம் எல்லாம் எங்கே?" என்று கேட்க, "பின்னால் இருப்பதாகப் பாவனை" என்று பதிலளித்தான்.

– கல்கி, 'நாடகம்', ஏட்டிக்குப் போட்டி, பக். 161–162.

54

இத்தாலி தேசத்துக் கதை

டாஸோ, அரிஸ்டோ என்னும் இரண்டு பிரபல நூலாசிரியர்கள் இத்தாலியில் இருந்தனர்.

இவ்விருவருடைய எழுத்துத் திறமையைக் குறித்து இரண்டு நண்பர்களிடையே வாதம் எழுந்தது. ஒருவர் 'டாஸோதான் சிறந்தவர்' என்றார். மற்றொருவர் 'அரிஸ்டோவின் புலமை அவருக்கு வராது' என்றார்.

முதல் நண்பர் 'டாஸோவுக்குக் கவிதா சக்தி அதிகம்' என்றார். இரண்டாம் நண்பர் 'அரிஸ்டோவின் வசன நடையில் தேனொழுகுகிறது' என்றார். 'ஹாஸ்ய ரசத்தில் டாஸோவுக்கு மிஞ்சித்தான்' என்றார் ஒருவர். 'மொத்தத்தில் அரிஸ்டோவுக்கு ஈடானவர் எவருமில்லை' என்றார் மற்றவர். இவர்களுக்குள் விவாதம் முற்றி, வார்த்தை தடித்து, கடைசியில் பெருஞ்சண்டையாகி விட்டது.

இருவரும் கத்தியெடுத்து ஒருவரோடொருவர் பலமான சண்டை போட்டார்கள். இருவரும் பலத்த காய மடைந்து கீழே விழுந்தார்கள். அப்போது முதல் நண்பன் சொன்னான்:- "ஐயோ! டாஸோவுக்காக நான் உயிர் விடுகிறேன். ஆனால் அவன் புத்தகத்தில் ஒரு வரி கூடப் படித்ததில்லையே!" என்றான். இரண்டாவது நண்பன் சொன்னான்: "அட கர்மமே! நானும் அரிஸ்டோவின் நூலில் ஒரு வரி கூடப் படித்தது கிடையாது! இதற்காகவா நாம் சண்டை போட்டோம்?" என்றான்.

– கல்கி, 'என் பெயர்', ஏட்டிக்குப் போட்டி, ப. 90.

55

‘பிரௌனிங்கின் கவிதைக்குப் பொருள் தெரிந்த ஒரே ஒருவர்!’

பிறருக்குப் பொருள் விளங்காதபடி கவிதைகள் எழுதுவதில் ஆங்கிலக் கவிஞர் ராபர்ட் பிரௌனிங் மிகப் பிரசித்தி வாய்ந்தவர். அவருடைய கவிதைகளை எலிஸபெத் என்னும் மற்றொரு கவிதாமணி பெரிதும் காதலித்தாள். பரஸ்பரம் கவிதைகள் மூலமாகவே அவர்களுக்குள் காதலும் வளர்ந்து வந்தது. எலிஸபெத் நோய்ப்பட்டிருக்கிறாள் என்று அறிந்து ராபர்ட் பிரௌனிங் அந்தக் கவியரசியைப் பார்க்கச் சென்றார். அவரைக் கண்ட எலிஸபெத் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தாள். மகிழ்ச்சிக்கு முக்கிய காரணம், புதிதாக வெளியான ராபர்ட் பிரௌனிங் கவிதை ஒன்றுக்கு அவரிடமே பொருள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணந்தான்.

பொருள் விளங்காத கவிதையை அவரிடம் கொடுத்து, “இதற்கு என்ன அர்த்தம்? கொஞ்சம் சொல்லுங்கள்!” என்றாள் எலிஸபெத். பிரௌனிங் குதூகலம் அடைந்தார். தாம் எழுதிய கவிதைக்குத் தாமே பொருள் சொல்லக்கூடிய சந்தர்ப்பம் - அதுவும் தாம் காதலித்த கவியரசிக்குச் சொல்லக் கூடிய சந்தர்ப்பம் - இலேசில் கிடைக்கக் கூடியதா? முதல் முறை முகமலர்ச்சியுடன் படித்தவர், இரண்டாவது முறை முகச் சிணுக்கத்துடன் படித்தார். மூன்றாந் தடவை புருவத்தை நெறித்துக் கொண்டு படித்தார். பிறகு எலிஸபெத்தைப் பார்த்துச் சொன்னார்: “கண்மணி! இந்த கவிதைக்கு அர்த்தம் தெரிந்தவர்கள் ஒரு காலத்திலே இரண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் ராபர்ட் பிரௌனிங்கும் கடவுளும்.

இப்போதோ, ஒரே ஒருவருக்குத் தான் இந்தக் கவிதைக்குப் பொருள் தெரியும். அவர் கடவுள் தான்!"

இதைக் கேட்டதும் எலிஸபெத் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அதிலிருந்து அவளுடைய உடம்பு குணமாயிற்று. விரைவிலேயே அவர்களுடைய காதலும் பரிபூரணமாயிற்று.

– கல்கி, 'ஆசிரியர் முகவுரை', ஏட்டிக்குப் போட்டி, பக். 10–11.

56

'எனக்கு அது அதிசயமில்லை!'

ஜான்ஸன் என்னும் ஆங்கிலப் புலவரிடம் ஒரு டாக்டர் ஒரு நாள் வந்து "என்னுடைய வட்டாரத்தில் உள்ளவர்கள் அவ்வளவு பேரையும் நான் விவாதத்தில் தோற்கடித்து விட்டேன்" என்றார். "ரொம்பவும் சந்தோஷம்! உம்மிடம் இப்போது வைத்தியம் பண்ணிக் கொள்ள யாராவது வருகிறார்களா?" என்று கேட்டார் ஜான்ஸன்.

"ஒருவரும் வருவதில்லை. அது எனக்கு அதிசயமா யிருக்கிறது" என்றார் டாக்டர்.

"எனக்கு அது அதிசயமில்லை" என்றார் ஜான்சன்.

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'உபநிஷத்தின் உபதேசம்', ஆனந்த விகடன், 1.6.1933.

57

வெள்ளைக்கார சீமாட்டியின் வாதம்!

ஒரு வெள்ளைக்கார சீமாட்டி பைபிளில் மிக்க நம்பிக்கையுள்ளவள். 'சைத்தான்' என்பதாகக் கடவுளுக்கு விரோதி ஒருவன் இருக்கத்தான் வேண்டுமென்று அவள் எல்லாரிடமும் வாதமிட்டு வந்தாள். ஒரு தடவை அவளும் சிலரும் ஒரு படக்காட்சிச் சாலைக்குச் சென்றார்கள். அங்கே அநேக படங்களுக்கு மத்தியில் 'சைத்தான்' படம் ஒன்று இருந்தது. அதைப் பார்த்ததும் மேற்படி சீமாட்டி குதூகலமடைந்து கூத்தாடினாள். பக்கத்திலிருந்தவர்கள் விசேஷமென்னவென்று கேட்டார்கள்.

"சைத்தான் ஒருவன் இருக்கத்தான் வேண்டுமென்று சொன்னேனே, நீங்கள் நம்பவில்லையல்லவா?"

"ஆமாம், அதற்கு என்ன?"

"இதோ பாருங்கள் ருசு!" என்று சீமாட்டி படத்தைச் சுட்டிக் காட்டினாள்.

"இது எப்படி ருசுவாகும்?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"தெரியவில்லையா? சைத்தான் என்று ஒருவன் இல்லாவிட்டால் அவனைப் போலவே எப்படிப் படம் எழுதியிருக்க முடியும்?" என்று அச்சீமாட்டி அழுத்தமாய் வினவினாள். இதற்கு மேல் எப்படி வாதம் செய்ய முடியும்?

– 'கல்கி' வளர்த்த தமிழ், 'பாஷைக்கு அடிமைகள்', ஆனந்த விகடன், 1.9.1932.

V. முன்னுரைகள் வெளிப்படுத்தும் கல்கியின் ஆளுமை

58

'கதாபாத்திரங்களே எழுதிய கதை!'

"நான் எழுதிய நூல்களுக்குள்ளே ஏதாவது ஒன்று ஐம்பது அல்லது நூறு வருஷம் நிலைத்து நிற்கத் தகுதியுடைய தென்றால், அது 'அலை ஓசை' தான் என்ற எண்ணம் படிக்கும் போதே உள்ளத்தில் தானாக உதயமாயிற்று....

'அலை ஓசை'யை நான் எழுதியதாகவே எண்ணக் கூடவில்லை. லலிதாவும் சீதாவும் தாரிணியும் சூரியாவும் சௌந்தரராகவனும் பட்டாபிராமனும் சேர்ந்து பேசிக் கொண்டு அவரவர்களுடைய அந்தரங்க ஆசாபாசங் களையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் வெளியிட்டு 'அலை ஓசை'யை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் கற்பனை செய்யப்பட்ட பாத்திரங்கள் என்றே என்னால் எண்ண முடியவில்லை. நம்மைப் போலப் பிறந்து வளர்ந்து வாழ்க்கையின் இன்ப துன்பங்களை அனுபவித்த வர்களாகவே தோன்றினார்கள். பாவம்! சீதா மட்டும் அன்னை கஸ்தூரிபாவைத் தேடிக்கொண்டு போய் விட்டாள். மற்றவர்கள் இன்னமும் ஜீவியவந்தர்களாகவே இருக்கிறார்கள். அவர்களை மறுபடியும் எப்போது, எங்கே காணப் போகிறேனோ, தெரியவில்லை."

– கல்கி, 'அலை ஓசை' முன்னுரை, பக். vii–viii.

59

‘பன்னிரண்டு ஆண்டுகளாகச் சுமந்து கொண்டிருந்த பாரம்!’

“ ‘சிவகாமியின் சபதம்’ என்னும் பெயர் தாங்கிய இந்த நூலை ஏதேனும் ஒரு வழியிலே கையில் ஏந்திக் கொண்டிருக்கும் அன்பர்கள் ‘இது அபாரமான புத்தகம்’ என்று உடனே தீர்மானித்துவிடக் கூடும். ஆயிரத்துக்கு மேல் பக்கங்கள் உள்ள புத்தகம் அல்லவா? அதற்குத் தகுந்த கனமும் இருக்கத்தானே செய்யும்?

இவ்வளவு பாரத்தையும் ஏறக்குறையப் பன்னிரண்டு வருஷ காலம் என் உள்ளத்தில் தாங்கிக் கொண்டிருந்தேன். ‘சிவகாமியின் சபத’த்தில் கடைசிப் பாகம், கடைசி அத்தியாயம், கடைசி வரியை எழுதி ‘முற்றும்’ என்று கொட்டை எழுத்தில் போட்ட பிறகுதான் பன்னிரண்டு ஆண்டுகளாக நான் சுமந்து கொண்டிருந்த பாரம் என் அகத்திலிருந்து நீங்கியது.

மகேந்திரரும், மாமல்லரும், ஆயனரும், சிவகாமியும், பரஞ்சோதியும், பார்த்திபனும், விக்கிரமனும், குந்தவியும் மற்றும் பல கதாபாத்திரங்களும் என் நெஞ்சத்திலிருந்து கீழிறங்கி, ‘போய் வருகிறோம்’ என்று அருமையோடு சொல்லி விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள்.

ஆகா! அந்தப் பழந்தமிழ் நாட்டுப் பிரமுகர்கள், பெயருக்கும் புகழுக்கும் மிக்க ஆசை கொண்டவர்கள் போலும்! என்றென்றும் அழியாத கற்பாறையிலே அல்லவா தங்களுடைய புகழை அவர்கள் எழுதி வைத்துவிட்டுச் சென்றார்கள்!... அவர்கள் செய்து வைத்த காரியங்கள் நீடூழிக் காலம் அவர்களுடைய நினைவை நிலை நாட்டுமாறு அமைந்திருக்கின்றன.”

– கல்கி, ‘ஆசிரியன் முன்னுரை’, சிவகாமியின் சபதம், பக். vi–vii.

60

'வாழ்க்கையில் எதிர்ப்படும் பொய்மான்கள்!'

"நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சில சமயம் பொய்மான்கள் எதிர்ப்படுகின்றன. அந்தச் சமயத்துக்கு அவை உண்மையாகவே தோன்றுகின்றன. அந்தப் பொய்மான்களைத் துரத்திக் கொண்டு நாம் ஓடுகிறோம். துரத்திப் போகும் போது அம்மம்மா, எத்தனை பரபரப்பு! எவ்வளவு மனக்கிளர்ச்சி! என்ன தீவிர உணர்ச்சி! ஆனால் எவ்வளவு தூரம் தேடிப் போனாலும் பொய்மான் வெறும் மாயைத் தோற்றந்தான் என்பதைக் கடைசியில் உணர்கிறோம்; ஏமாற்றம் அடைகிறோம்.

நம்மில் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஏற்பட்ட கடமையை உணர்ந்து அதை நன்கு நிறைவேற்ற முயல்வோமானால், அதில் மனத்திற்கு உண்டாகும் திருப்தியும் நிம்மதியும் வேறெதிலும் ஏற்படுவதில்லை. இந்த உண்மையைப் 'பொய்மான் கரடு' என்னும் இக்கதையை எழுதும்போது நான் நன்கு உணர்ந்தேன்".

– கல்கி, 'பொய்மான் கரடு' முன்னுரை, பக். 7–8.

61

'குருவுக்கு மிஞ்சிய சீடன்!'

"டாக்டர் தி.சே.சௌ. ராஜன் அவர்கள் என்னுடைய குருவும் தலைவரும் ஆவர். பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்குத் தொண்டு செய்வதற்காகக் குமாஸ்தாக் களைத் தயாரிப்பதற்கென்றே ஏற்பட்ட கல்வி முறையை நான் பயின்று கொண்டிருந்த காலத்தில், என்னைப் பள்ளிக் கூடத்துக்கும் பரீட்சைக்கும் தலை முழுகிவிட்டுத் தேசத் தொண்டில் ஈடுபடச் செய்தவர் டாக்டர் ராஜன். தீரத்துக்கும் செயல் திறமைக்கும் சொல்லின் ஆற்றலுக்கும் சுயநலமற்ற தியாகத் தொண்டுக்கும் நான் இலட்சிய புருஷர்களாகக் கொண்டிருக்கும் ஒரு சிலரில் டாக்டரும் ஒருவர்.

அத்தகைய அருமைத் தலைவர் எழுதியுள்ள நூலுக்கு நான் முன்னுரை எழுதுவதென்பது அதிகப் பிரசங்கித் தனத்தில் சேர வேண்டிய காரியமாகவே தோன்றும். இந்தக் காரியத்தின் மூலம் 'குருவுக்கு மிஞ்சிய சீடன்' என்னும் பட்டத்துக்கு நான் தகுதி பெற்றவனாகிறேன்.

ஆயினும், ஒரு விதத்திலே பார்த்தால் டாக்டர் ராஜன் அவர்களுடைய புத்தகத்துக்கு முன்னுரை எழுதும் தகுதி எனக்கு உண்டு என்று உரிமை பாராட்டிக் கொள்ளலாம்.

தமிழில் எழுதத் தங்களுக்கு நன்றாய் வராது என்று எண்ணிக் கொண்டிருந்த சில பெரியோர்களையும், தமிழில் எழுதுவதற்கு ஆர்வமோ தூண்டுதலோ இல்லாமலிருந்த இன்னும் சில பெரியோர்களையும் தமிழில் எழுதும்படி செய்த பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இவர்களில் ராஜாஜி, எஸ்.வி.வி., மகாகனம் சாஸ்திரி ஆகியவர்களோடு டாக்டர் ராஜன் அவர்களையும் சேர்க்கவேண்டும்."

– கல்கியின் முன்னுரை, டாக்டர் தி.சே.சௌ. ராஜனின் நினைவு அலைகள், ப. ix.

62

'உண்மை ஒளி வீசும் சிறுகதைகள்!'

"பாடுபட்டு அறியாதவன் பட்டாளியின் துயரத்தைப் பற்றியும், சேற்றில் இறங்கி அறியாதவன் குடியான வனுடைய கஷ்டத்தைப் பற்றியும் என்னதான் கண்ணீரில் பேனாவைத் தோய்த்துக் கொண்டு எழுதினாலும் அந்தக் கதைகளில் மற்ற எல்லாச் சிறுகதை இலக்கணங்களும் இருக்கலாம்; உள்ளத்தை ஊடுருவித் தைக்கும் படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதில்லை. அப்படிப்பட்ட உண்மை ஒளி வீசும் சிறுகதைகளை எழுதுவதற்கு ஏழை எளியவர்களிடையேயிருந்தும் உழைப்பாளி மக்களிடையே யிருந்தும் ஆசிரியர்கள் தோன்ற வேண்டும்."

– கல்கி 'முன்னுரை', விந்தனின் முல்லைக் கொடியாள், ப. iv.

63

‘கல்கி கதைக்கு என் முகவுரை என்னத்திற்காக?’

“உயிருடன் இருக்கும் எழுத்தாளர்களின் நூல்களுக்கு முகவுரை எழுதுவதில் பல கஷ்டங்கள். ஆனால் மறைந்து போன ‘கல்கி’யாரின் நூலுக்கு நான் முகவுரை எழுதித் தருவதில் சிக்கல் ஒன்றும் ஏற்படாது. ‘கல்கி’யின் எழுத்தைக் கண்டு யார் அதன் பின் போட்டி போட முயலுவார்கள்? முகவுரை எழுதச் சம்மதித்தேன்.

ஆனால் ‘கல்கி’ எழுதிய கதைக்கு என்னுடைய முகவுரை என்னத்திற்காக? வேண்டியதே இல்லை. சூரியனுடைய வெய்யிலுக்கு விளக்கும் வேண்டியதில்லை; எண்ணெயும் திரியும் வேண்டியதில்லை.

எல்லா விதத்திலும் முதல் தரமான வெளியீடு....

செல்வந்தர்கள் இந்தப் புஸ்தகத்தை விலை கொடுத்து வாங்கி நூல் நிலையங்களுக்குத் தந்தால் சரஸ்வதி தேவிக்குப் பூஜை செய்தவாறு ஆகும். லட்சுமி தேவிக்கு நேரில் பூஜை செய்வதில் பயனில்லை. ஸரஸ்வதியைத் திருப்தி செய்தால் லட்சுமி தேவியின் மனம் உருகும்.”

– சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, ‘முன்னுரை,’ கல்கியின் ‘பொன்னியின் செல்வன்’ முதல் பாகம், பக். v–vi.

64

'சரிதங்கள் எல்லாம் சரிவர எழுதப்பட்டிருக்குமாயின்...!'

"செந்தமிழ் நாட்டில் பாய்ந்து வளப்படுத்தும் நதிக் கரைகளின் வழியாகப் பிரயாணம் செய்யும் போதெல்லாம் நம்முடைய உள்ளம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் போய்விடுகிறது. காவேரி, வைகை, தாமிரபரணி, கெடிலம், பெண்ணை, பாலாறு ஆகிய நதிகளின் கரைகளில் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மக்கள் சிறப்படைந் திருக்க வேண்டும்! எத்தனை குருகுலங்கள் நடந்திருக்க வேண்டும்! எத்தனை கவிஞர்களும் புலவர்களும் பூங்குயில் கூவும் மாந்தோப்புகளின் நிழலில் அமர்ந்து தமிழ்க் கவிதைகளின் இன்பத்தை அனுபவித்திருக்க வேண்டும்! எத்தனை செல்வர்களும் வள்ளல்களும் அந்த நதிக்கரை களில் வாழ்ந்து பெயரும் புகழும் அடைந்திருக்க வேண்டும்!

தமிழகத்திலுள்ள மலைகளையும் குன்றுகளையும் மொட்டைப் பாறைகளையும் இடிந்த கோட்டை கொத்தளங்களையும் பார்க்கும் போதெல்லாம் நம்முடைய உள்ளம் பழந்தமிழ் நாட்டு அரசர் - அரசிகளின் வாழ்க்கையைக் குறித்துச் சிந்தனை செய்யத் தொடங்கு கிறது. யானை குதிரைகளும் கத்தி கேடயங்களும் வேல்களும் ஈட்டிகளும் பூச்சக்கரக் குடைகளும் தந்தப் பல்லக்குகளும் மனக்கண்ணின் முன்னால் காட்சி தருகின்றன. இத்தகைய சந்தோஷமான காட்சிகள் மட்டுந்தானா? போர்க்களங்களும் படுகொலைகளும் வீரச் செயல்களும் வஞ்சனைகளும் இரத்த ஆறுகளும் கண்ணீர்ப் பிரவாகங்களும் கூடவே தொடர்ந்து வருகின்றன. பழந்தமிழ் நாட்டில் மலைகளிலும் குன்றுகளிலும்

கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்த வீர மன்னர்களின் வாழ்க்கைச் சரிதங்கள் எல்லாம் சரிவர எழுதப் பட்டிருக்குமாயின்!... ஆகா! எத்தனை எத்தனை பெரிய புத்தகங்கள் ஆகியிருக்கும்! ஒரு பெரிய புத்தக சாலையை நிரப்பி விடுவதற்கு அவை போதுமானவையாயிருக்குமே!"

– கல்கி, 'சோலை மலை இளவரசி,' முன்னுரை, பக். iv–v.

65

'தமிழ் மக்கள் மனசைக் கவரும் கதைகள்!'

" 'ஆனந்த விகட'னில் கல்கியின் கதைகள் எத்தனையோ வந்து கொண்டிருந்தன; வந்து கொண்டும் இருக்கின்றன. அவை தமிழ் மக்கள் மனசை எப்படிக் கவருகின்றன என்பதை எடுத்துச் சொல்ல வேண்டாம். ஒரு கை தோசைக்கு ஆட்டிக் கொண்டிருக்க, மற்றொரு கை விகடனை விரித்துப் பிடித்துக் கொண்டிருக்கிறதையும், பிள்ளைத் தொட்டிலுக்கு ஒரு கையும் கதைக்கு ஒரு கையுமாய்ப் பெண்கள் பிரித்துக் கொடுக்கிறதையும் பார்க்கிறோம். பள்ளிப் பையன்களும், பெண்களுமே பாட புஸ்தகத்துக்குக் கீழ் 'விகட'னை ஒளித்து வைத்துக் கொண்டு கருத்தாய்ப் படித்து முடிக்கிறதானது உபாத்தியாயர்கள் சொல்லுகிற பெரும் புகார். பலசரக்குக் கடை, மிட்டாய்க் கடை, மாங்காய்க் கூறுகள் விற்க வைத்திருக்கும் மாமரத்தடி இதெல்லாம் போக, சுருட்டு, சிகரெட்டு புகைந்து கொண்டிருக்கும் ரயில் இரண்டாவது முதலாவது வகுப்பு களிலும் விகடனில் வரும் 'கல்கி' கதைகளை வாசித்துக் கொண்டிருக்கக் காணலாம். தமிழ்நாட்டில் முக்கு முடைகளில் எல்லாம் புகுந்து சிரிப்பூட்டவும், திகைப் பூட்டவும், துயரூட்டவும் செய்து வருகின்றன அக்கதைகள். தமிழ் வாசிப்பவர்கள் நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம் என்றெல்லாம் ஏற்படலாயிற்று."

– டி.கே. சிதம்பரநாத முதலியார், 'முகவுரை', கல்கியின் 'கணையாழியின் கனவு', பக். xiii–xiv.

66

'வாசகர்களை உடன் கொண்டு செல்லும் நடை!'

"இங்கு வெளியிடப்படும் நவீனகத்தை வாசிப்பவர்களுக்கு, பல்வகையாலும் தகுதியுடைய ஓராசிரியர் இப்போது தோன்றியுள்ளமை எளிதில் புலனாகும். இந்த ஆசிரியரது தமிழ்நடை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உயிர்த் தத்துவத்தோடு வழங்கிவருஞ் சொற்களே இவரால் கையாளப்படுகின்றன. தூய தமிழ்ச் சொற்களைத் துருவித் தேடுவதுமில்லை; வடமொழிச் சொற்களென்று தூர விலகியோடுவதுமில்லை; மிகத் தெளிவான நடை; உணர்ச்சி ததும்பும் நடை; வாசகர்களை உடன்கொண்டு செல்லும் நடை; சந்தர்ப்பத்திற்கும் பாத்திரங்களுக்கும் தக்க நடை; இக்காலத்துள்ள வசனகர்த்தர்களுள் முன்னணியில் நிற்பவர் இவ்வாசிரியர்."

– எஸ். வையாபுரிப் பிள்ளை, 'முன்னுரை', கல்கியின் பார்த்திபன் கனவு, ப.viii.

VI. கல்கியின் பல்வகைப் பரிமாணங்கள்

67

கல்கி உயர்வாகக் கருதிய பதவி!

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் எப்போதும் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். கல்கி அவர்களும் ரெட்டியார் அவர்களிடம் பக்தி உடையவர். ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் முதன்மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதும் 'கல்கி' அலுவலகத்தில் ஒரு விருந்து நடைபெற்றது. விருந்துக்கு ராஜாஜி, டி.கே.சி. போன்ற மேதைகளும் அரசியல், இலக்கிய அறிஞர்களும் வந்திருந்தார்கள். விருந்து முடிந்ததும் ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பார்த்து 'தாங்கள் எனது மந்திரி சபையில் ஒரு மந்திரியாக இருந்து சேவை செய்ய வேண்டும் என்பது என் விருப்பம்' என்று சொன்னார்.

உடனே சிறிது நேரம் மௌனம் நிலவியது. நிசப்தத்தைக் கலைத்து நான் 'பத்திரிகை ஆசிரியராக

இருந்து கொண்டு மந்திரியாக இருக்க முடியுமா?' என்று கேட்டேன்.

'அது முடியாது' என்றார், ராஜாஜி.

'அப்படியானால் கல்கி பத்திரிகை ஆசிரியர் பதவியை விட்டுவிட்டு மந்திரி பதவி ஏற்றால் ஆசிரியர் பதவியை விட மந்திரி பதவி உயர்ந்தது என்று தானே அர்த்தம்?' என்றேன்.

உடனே கல்கி கிருஷ்ணமூர்த்தி, 'மந்திரி பதவி என்பது ஐந்து ஆண்டுகள் தான். அதிலும் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தது. ஆனால் பத்திரிகை ஆசிரியர் பதவி என் கடைசி மூச்சு வரை உள்ளது. நான் மந்திரி பதவியை விட பத்திரிகை ஆசிரியர் பதவியைத்தான் உயர்வாகக் கருதுகிறேன்' என்றார்.

ரசிகமணி டி.கே.சி. அவர்கள், 'பேஷ், பேஷ், நன்றாகச் சொன்னீர்கள்' என்று பேச்சை முடித்தார்கள்.

வீடு தேடி வந்த மந்திரி பதவியை வேண்டாம் என்று சொன்னவர் கல்கி.

– சின்ன அண்ணாமலை, சொன்னால் நம்ப மாட்டீர்கள், பக். 168–169.

68

பத்திரிகையாசிரியர் கல்கி

திரு. வி.க.விடம் பாடம் கற்று, ராஜாஜியிடம் பண்பட்டு, விகடனில் அனுபவம் பெற்று, பிறகு கல்கியில் ஈடு இணையற்ற சிறப்பெய்தினார் 'கல்கி'. பத்திரிகையாசிரியர் என்ற முறையில் அவரது கொள்கையைச் **சத்தியம்** என்ற ஒரே வார்த்தையில் வர்ணித்து விடலாம். மனப்பூர்வமாகத் தாம் சத்தியம் என்று கருதுவதையே அவர் செய்வார்; எழுதுவார். எழுத்தை உன்னி உன்னிப் பார்ப்பாரேயன்றி எழுத்தாளரையல்ல. அஞ்சா நெஞ்சத்துடன் பெரிய பெரிய மனிதர்களின் படைப்புக்களை அவர்களிடமே திருப்பிக் கொடுத்திருக்கிறார் கல்கி. தமது உதவி ஆசிரியரை அழைத்து 'ஸோமஸ்கந்தன்! இவர் சில கதைகளைக் கொடுத்தாரல்லவா? வாசலிலே இவர் கார் நிற்கிறது. அதிலே கொண்டு போய் வைத்துவிட்டு வந்துவிடு. இவர் கிளம்பிக் கொண்டிருக்கிறார்' என்று பெரிய மனிதர்களிடம் ரொம்பவும் மரியாதையுடன் நடந்து கொண்டதும் உண்டு.

அரசியலிலும், கலை விமர்சனப் பகுதியிலும் இதே சத்தியத்தைக் கடைப்பிடித்துப் பத்திரிகையின் தரத்தை உயர்த்தியவர் கல்கி. தரமான முறையில் பத்திரிகை நடத்தினால் விற்பனை எண்ணிக்கை உயராது என்ற கருத்தைத் தவிடு பொடியாக்கிக் காட்டிய மேதை அவர். பத்திரிகையின் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் சரி, எதையும் மக்கள் இரண்டாவது தடவை படிக்க வேண்டிய அவசியமில்லாமல் முதல்முறையிலேயே புரிந்து கொள்ளக் கூடிய **தெளிவு**, பக்கத்துக்குப் பக்கம் ஒவ்வோர் அம்சத்திலும் இழையோடிய **நகைச்சுவை** இந்த இரண்டு ஆயுதங்களையும் பயன்படுத்திப் பத்திரிகையின் விற்பனை எண்ணிக்கையை உயர்த்தினார் அவர்."

– கி. ராஜேந்திரன், 'ஸ்தாபனமாக விளங்கிய தனிமனிதர்', சுடர்: கல்கி மலர் (1967), தில்லித் தமிழ்ச் சங்கம், பக். 19–20.

69

'ஆனந்த விகடன்' ஆசிரியர் பீடத்தில் அமர்த்திய கட்டுரை!

கல்கியை 'ஆனந்த விகடன்' ஆசிரியர் பீடத்தில் அமர்த்திய கட்டுரை 'ஏட்டிக்குப் போட்டி'. கல்கி என்ற பெயரில் விகடனில் முதன்முதல் வெளிவந்த கட்டுரை அதுதான் (ஆகஸ்ட், 1928). கல்கியின் நகைச்சுவை உணர்வையும், சரளமான தமிழ் நடையையும், சீர்திருத்த எண்ணத்தையும், உலகப் போக்குக்கு எதிர்நீச்சலான சிந்தனையையும் கொண்டுள்ள அக்கட்டுரையில் இருந்து மாதிரிக்கு ஒரு பகுதி இதோ:

"நமது முன்னோர்கள் இருக்கும் திக்கு நோக்கி (எந்தத் திக்கு என்பதுதான் தெரியவில்லை) இரண்டு கரங்களையும் கூப்பித் தண்டனிடுகின்றேன். ஆகா, அவர்கள் நமக்குச் செய்திருக்கும் நன்மைதான் என்ன? வருஷம் 365 நாளில், ஏறக்குறைய 300 நாள் நமக்கு விடுமுறையளித்திருக்கிறார்கள். இக்காலத்தில் வாரத்திற்கு ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறது. ஆனால், நமது முன்னோர்கள் செய்து வைத்த ஏற்பாடு எவ்வளவு அழகானது பாருங்கள்! மாதங்களிலே மார்கழியும் புரட்டாசியும் கெட்டவை. ஒரு மாதத்தை எடுத்துக் கொண்டால் அமாவாசை, பாட்டிமுகம், நவமி, திதி இவை உதவா. பின்னர் பரணி, கார்த்திகை, நட்சத்திரங்கள்; வாரத்திலோ வெள்ளிக்கிழமை கலக நாள்; சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகா. செவ்வாயோ வெறுவாயோ என்று கேட்டதில்லையா? பின்னர் மரணயோகமும், கரிநாளும். மாதம், திதி, நட்சத்திரம், கிழமை, யோகம் எல்லாம் கூடிய நாள் ஒன்றிருந்தால் அதில்

ராகு காலம், தியாஜ்யம், பிரதோஷம் இந்த வேளைகள் கூடா. இவ்வளவு விபத்துக்களையும் கடந்து ஒருவன் ஏதேனும் காரியம் செய்யப் போனால், யாரேனும் ஒரு சிறு தும்மல் தும்மி விட்டால் போதும்! அன்று விடுமுறை தான். ஆகா! இவ்வளவும் பூரணமாக அமுலிலிருந்த அந்தப் பழைய காலம்! நினைத்தால் நாவில் ஜலம் சொட்டுகிறது. இப்போது வரவரக் கலியுகமல்லவா முற்றி வருகின்றது?"

– கா.பொ. இரத்தினம் (பதிப்பாசிரியர்), எழுத்தாளர் கல்கி, பக். 12–13.

70

'கல்கி'யின் மூன்று நோக்கங்கள்

"உன்னுடைய பத்திரிகையின் நோக்கங்கள் என்ன?" என்று கணபதிராயர் கேட்டார். "இந்தத் தமிழர் பத்திரிகையின் நோக்கங்கள் என்ன? புதிதாய்ப் பத்திரிகை ஆரம்பிக்கிறவர்கள் எல்லாம் இதைச் சொல்வது சம்பிரதாய மாயிற்றே?" என்றார் விநாயகர்.

"நானும் சொல்கிறேன், ஸ்வாமி! இந்தப் பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் உண்டு. முதலாவது நோக்கம், தேச நன்மை..."

"இரண்டாவது?"

"இரண்டாவது, தேச நன்மை."

"மூன்றாவது?"

"மூன்றாவதும் தேச நன்மை தான்!"

– 'கல்கி' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் பற்றி, 'கல்கி' முதல் இதழில் (ஆகஸ்டு 1, 1941) அமரர் கல்கி அவர்கள் எழுதியது.

71

கல்கியின் விமர்சனப் பாணி!

சினிமா விமர்சனங்களிலும் கல்கி ஒரு தனிப் பாணியைக் கையாண்டார். வந்த படங்களுக்கு விமர்சனம் எழுதுவது மட்டுமல்ல; வரப்போகிற படங்களுக்கும் அவர் முன்னோட்டம் போல, நகைச்சுவை ததும்பிட எழுதுவார்.

'அசோக்குமார்' படம் வெளிவருவதற்கு முன்பு - முண்டாசு கட்டிய பாகவதரின் படத்தை முக்கால் பக்க அளவுக்கு வெளியிட்டு - அதன் கீழே கால் பக்கம் விளக்க மளித்திருக்கிறார் கல்கி. "யார் தெரிகிறதா? பேஷாய்த் தெரிகிறதே. இப்படியெல்லாம் பெரிய முண்டாசாகக் கட்டிக் கொண்டு, ஏமாற்றப் பார்த்தால் முடிகிற காரியமா என்ன? ஸ்ரீ எம்.கே. தியாகராஜ பாகவதர் எந்த வேஷத்தில் இருந்தாலும், எந்தப் படத்தில் நடித்தாலும், முதலில் பாகவதர்தான், அப்புறந்தான் கதாநாயகர். கடைசியாக இவர் கதாநாயகனாக நடித்திருக்கும் 'அசோக்குமார்' படம் சீக்கிரத்தில் சென்னைக்கு வருகிறதாம். இவருடன் மேற்படி படத்தில், பிரசித்த ஆந்திர நடிகர்களான கண்ணாம்பாவும் நாகய்யாவும் நடித்திருக்கிறார்களாம்! ஆனால் முக்கியப் பாத்திரமாக ஸ்ரீ பாகவதர் நடிக்கும் போது, கூட நடிப்பவர்கள் ஆந்திர நடிகர்களாய் இருந்தாலென்ன, ஆங்கிலேய நடிகர்களாயிருந்தால்தான் என்ன?"

– 'கல்கி', அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், 13.9.1998, ப. 80.

72

பாரபட்சமற்ற விமரிசனப் பார்வை

கல்கியின் பாரபட்சமற்ற கலை விமரிசனங்களுக்குத் தகுந்த ஓர் உதாரணம்:

"ஒரு சமயம் காங்கிரஸ்வாதியும் கதர் அபிமானியுமான ஒரு பெண்மணியின் திரைப்பட நடிப்பு சுகமில்லை என்று கல்கி எழுதினார். உடனே சிலர், 'அடடா! அந்தப் பெண்மணி எப்போதும் கதர் அணிபவராயிற்றே, தேர்தல் கூட்டத்தில் வந்து கூட பாடுவாரே! அவரைப் பற்றி இப்படி எழுதலாமா?' என்று கேட்டார்கள். அதற்கு கல்கி "அந்தக் கதரபிமானமுள்ள பெண்மணி காங்கிரஸ் அபேட்சகராக எங்கேயாவது தேர்தலுக்கு நின்றால், 'அவருக்கு ஓட்டுக் கொடுங்கள்' என்று பிரச்சாரம் செய்வேன். ஆனால் ஒருவர் காங்கிரஸ்வாதி என்பதற்காக அவருடைய அபஸ்வரங்களை ஸீஸ்வரங்கள் என்றோ, மோசமான நடிப்பை நல்ல நடிப்பு என்றோ நான் ஒப்புக்கொள்ள முடியாது. அம்மாதிரி நிலைமை ஏற்பட்டுவிட்டால் அப்புறம் டாக்டர் ராஜன் பாட்டுக் கச்சேரி செய்தால் நன்றாயிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஸ்ரீ முத்துரங்க முதலியார் கதாகாலட்சேபம் செய்தால் அதற்கும் பலே போட வேண்டும். ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி பரத நாட்டியம் ஆடினால் கூடத் தலையை ஆட்ட வேண்டி வரும். இப்படியெல்லாம் வந்துவிட்டால் தமிழ்நாட்டில் கலைகள் உருப்பட்டாற் போலத்தான்!" என்றார்.

– சின்ன அண்ணாமலை, சொன்னால் நம்ப மாட்டீர்கள், பக். 139–140.

73

'தமிழ்நாட்டின் பெர்னார்ட் ஷா!'

அறிஞர் அண்ணாவின் 'ஓரிரவு' என்ற நாடகத்தைப் பார்த்துவிட்டு, *9.12.1947* கல்கி இதழின் 'ஆடல் பாடல்' பகுதியில், 'கர்நாடகம்' என்ற புனைபெயரில் கல்கி எழுதிய புகழ்பெற்ற விமரிசனத்தின் ஒரு பகுதி:

"தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னார்ட் ஷாவையும், இப்ஸனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். 'நாடகம், கீடகம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு பெர்னார்ட்ஷாவுக்கும், ஒரு இப்ஸனுக்கும் எங்கே போவது? திருடப் போக வேண்டியது தான்!' என்று சொல்வார்கள். அப்படி யெல்லாம் திருடவும் கிருடவும் போக வேண்டாம். தமிழ்நாடு, நாடகாசிரியர் இல்லாமல் பாழத்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

இரண்டு வாரத்துக்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் 'ஓரிரவு' என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததின் பயனாக, 'இதோ ஒரு பெர்னார்ட்ஷா தமிழ்நாட்டில் இருக்கிறார்! இப்ஸனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ்வொர்த்தி கூட இருக்கிறார்!' என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை நாடகமாக அமைத்திருந்த பாணியும், கட்டுக்கோப்பும், காட்சிகளின் அமைப்பும், சம்பாஷணையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி என்னைத் திணற அடித்து விட்டன. நாடக முடிவில் என்னைப் பேசும்படி சொன்னபோது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. 'நன்றாயிருக்கிறது; மிக நன்றாயிருக்கிறது!' என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.

'ஓரிரவு' என்னும் நாடகத்தின் ஆசிரியர் திரு. சி. என். அண்ணாத்துரை."

– கல்கி, கலைச் செல்வம், ப. 21.

74

வாசகர் கடிதங்களை வெளியிடுவதில் கூடத் தனிப்பாணி!

இன்று எல்லாப் பத்திரிகைகளுமே வாசகர்களின் கடிதங்களை வெளியிடுகின்றன! வாசகர் கடிதங்களை வெளியிடுவதில் கூடக் கல்கி தமக்கென ஒரு தனிப்பாணி வகுத்துக் கொண்டார்! வாசகரின் கடிதத்தை வெளியிடுவதோடு நிறுத்திக் கொண்டு விடாமல் ஒவ்வொரு வாசகரின் கடிதத்திற்குக் கீழும் தமது பதிலை அல்லது விளக்கத்தை அவர் வெளியிட்டு வந்தார். 'நமது வட்ட மேஜை' என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது இதழில் வாசகர் கடிதங்களை வெளியிட்ட அவர், அந்தப் பகுதிக்கு ஒரு முன்னுரை எழுதியிருக்கிறார்: அதுவும் தனித்தன்மை வாய்ந்ததே!

'இந்த வட்ட மேஜை மகாநாட்டில், கல்கி நேயர்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டு. வாழ்த்துக் கூறலாம்; வம்புக்கு இழுக்கலாம்; சந்தேகம் கேட்கலாம்; சண்டை பிடிக்கலாம்; ஆட்சேபம் எழுப்பலாம்; சமாதானமும் சொல்லலாம்; எழுதும் விஷயம் சுருக்கமாக இருக்க வேண்டும் என்ற ஒரே நிபந்தனை தான்' என்று எழுதியிருக்கிறார் கல்கி.

ஒவ்வொரு கடிதத்திற்கும் அவர் பதில் எழுதியிருப்பது அவரே எல்லாக் கடிதங்களையும் படிக்கிறார்; உதவி ஆசிரியர்கள் மூலம் வாசகர் கடிதங்களைத் தயாரிப்பதில்லை என்பதை நிரூபிப்பதோடு வாசகர்கள் யாரும் 'சபாஷ்', 'கீப் இட் அப்' என்று அவருக்கு ஐஸ் வைத்து ஏமாற்றி விட முடியாது என்பதையும் பம்பாய் வாசகர் ஒருவரின் கடிதத்துக்கு எழுதிய பதிலிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது."

– சின்னக் குத்தூசி,
'அவர் தொடாததில்லை; தொட்டுப் பொன்னாக்காததில்லை!'
'கல்கி,' அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், 13.9.1998, ப. 78.

ஆ.7.

75

அரசியல் சுதந்திரத்தின் முதன்மை

'சுதந்திரம்' என்று சொல்லும் போது ஒரு நாட்டின் அரசியலில் சுதந்திரத்தைத்தான் நாம் முதன்மையாகக் குறிப்பிடுகிறோம்.

அரசியல் சுதந்திரந்தான் மிக முக்கியமானது. மற்றப் பொருளாதார சுதந்திரம், வியாபார சுதந்திரம், தொழில் சுதந்திரம், படிக்கும் சுதந்திரம், படியாமலிருக்கும் சுதந்திரம், அம்மை குத்திக் கொள்ளுகிற சுதந்திரம், குத்திக் கொள்ளாமலிருக்கும் சுதந்திரம், கண்டதைப் பேசி எழுதும் சுதந்திரம் - இவையெல்லாம் இரண்டாம் பட்சமானவை தான். இந்தச் சுதந்திரங்கள் எல்லாம் இல்லை என்பதற்காக அரசியல் சுதந்திரத்தைப் பற்றி அலட்சியமாகப் பேசுவது மடமையிலும் மடமை. அரசியல் சுதந்திரம் ஒன்று இருந்தால் மற்றச் சுதந்திரங்களெல்லாம் நாளடைவில் கட்டாயம் பின்தொடர்ந்து வரும். அரசியல் சுதந்திரம் இல்லாவிட்டால் வேறு எந்தச் சுதந்திரமும் ஒருநாளும் கிட்டாது. ஆகையால் ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்துக்குக் கேடு சூழும் காரியத்தை அந்த நாட்டுப் பிரஜை எவனும் செய்யக்கூடாது. செய்கிறவன் தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாவான்.

– கல்கி, குமரியும் குன்றமும், ப. 110.

76

தமிழ் உயர்ந்து ஓங்க...

தமிழ் மொழியைப் பிழை இல்லாமல் எழுதவும், பேசவும் கற்றுக் கொள்வதற்கு இலக்கணம் படித்தல் அவசியமே இல்லை. இதை ஆயிரம் கோயில்களிலே சத்தியம் செய்து சொல்லத் தயாராயிருக்கிறோம்.

இலக்கணம் கற்றுக்கொண்டு இந்த விதிகளின் படி பேசவோ, எழுதவோ ஆரம்பித்தால் பேசவும் வராது, எழுதவும் வராது.

பிழையில்லாமல் தமிழ் எழுதவும் பேசவும் கற்றுக் கொள்வதற்கு ஒரே வழிதான் உண்டு. அது, பிழை இல்லாமல் எழுதப்பட்ட புத்தகங்களைப் படிப்பதுதான்.

நம்முடைய கல்வி முறை, பாடத் திட்டம், பரீட்சை முறை ஆகிய மூன்றும் அடியோடு மாறுதல் அடைந்தால் தான் இந்தியாவின் வருங்காலச் சந்ததியார் பிழைத்துக் கடைத்தேறுவார்கள்.

நமது கல்வி முறையில் முக்கியமான குறை, 'அது வாழ்க்கையோடு ஒட்டி அமையவில்லை, கையினால் தொழில் செய்யும் பயிற்சி அளிக்கவில்லை' என்பதுதான். காந்தி மகான் முதல் அமெரிக்கக் கல்வி நிபுணர்கள் வரையில் அனைவரும் இதை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தமிழ்மொழி தழைத்து வளர்வது மட்டும் போதாது; உயர்ந்து ஓங்கவும் வேண்டும். தமிழ் தழைப்பதற்குரிய முயற்சிகளோடு தமிழை உயர்த்துவதற் குரிய முறைகளையும் தமிழ் மக்கள் தெரிந்து கடைப்பிடிக்க வேண்டும்.

– கல்கி, திருமகளும் கலைமகளும், பக். 27, 64, 141, 163.

77

தனித்தனியாக வளர்ப்பதுதான் முறை

இந்தியாவின் மொழிகளையும் கலைகளையும் தனித் தனியாக வளர்க்கும் முயற்சி தேவை. ஆனால் போட்டியும் துவேஷமும் வேண்டியதில்லை.

கையிலே ஐந்து விரல்கள் இருக்கின்றன. ஐந்து விரல்களுக்கும் அடிப்படை ஒன்றுதான். எனினும் விரல்கள் தனித்தனியாகவும் நெட்டையாகவும் குட்டையாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு விரலுக்கும் தனித்தனியாக இரத்த ஓட்டம் வேண்டும். ஆனால் விரல்களுக்குள் போட்டியும் துவேஷமும் அநாவசியமல்லவா? அநாவசியம் மட்டுமல்ல; தீமையுங் கூட.

வங்காளிகள் வங்காளி பாஷையையும், தெலுங்கர்கள் தெலுங்கு பாஷையையும், தமிழர்கள் தமிழ் பாஷையையும் வளர்க்கப் பாடுபடுவது நியாயம். தத்தம் மொழியைக் குறித்துப் பெருமைப்படுவதிலும் தவறில்லை.

வங்காளி பாஷையின் முன்னேற்றம் தமிழர்களுக்குத் தூண்டுதலாயிருக்க வேண்டும்; கோபத்தை உண்டாக்க வேண்டியதில்லை.

கலைத்துறையில் ஹிந்துஸ்தானி சங்கீதமும் கர்நாடக சங்கீதமும் அடிப்படையில் ஒன்றாயிருந்த போதிலும் வளர்ச்சியில் பெரிதும் மாறுபட்டிருக்கின்றன.

இரண்டு வகைச் சங்கீதத்தையும் தனித்தனியாக வளர்ப்பதுதான் முறை.

பரத நாட்டியம். கதகளி, மணிபுரி - எல்லாம் இந்திய நாட்டியங்கள். ஆனால் இந்த மூன்றையும் ஒன்றாகச் சேர்க்க முயன்றால், அதன் பயனாக ஏற்படுவது கலையல்ல; கலைக்கு முற்றும் மாறான ஆபாசக் கேலிக் கூத்தாக முடிகிறது.

– கல்கி, இசை விருந்து, பக். 61–62.

78

'ரொம்பவும் சரியான பேச்சு!'

தியாகராய நகர் சங்கீத சபையைத் திறந்து வைத்த போது ஸ்ரீ புல்லா ரெட்டி ஒரு சிறந்த உண்மையை எடுத்துக் காட்டினார்.

'அவரவர்கள் இஷ்டம் போல் சங்கீதக் கலையை வளர்க்கட்டும். **எது நல்லதோ, எது சிறந்ததோ, அதுதான் நிலைத்து நிற்கும்.** வீண் விவாதம் என்னத்திற்கு?' என்றார் புல்லா ரெட்டி.

ரொம்பவும் சரியான பேச்சு.

தாய்ப் பாஷையிலே பாட்டுக் கேட்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் கேட்டுக்கொண்டு போகட்டும்.

மற்றவர்கள் அவர்களை எதிர்த்துக் குறை கூறி, 'தாய்பாஷை விரோதிகள்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கொள்வானேன்?

– கல்கி, தரம் குறையுமா ?, ப. 189.

79

கர்நாடக சங்கீதத்தின் இணையற்ற பெருமை!

“தமிழ்நாட்டுக்குப் பலர் பலவித பெருமைகளைக் கூறுவார்கள். ‘தமிழிலே உள்ளது போன்ற சிறந்த இலக்கியங்கள் உலகில் வேறு எந்த பாஷையிலும் இல்லை’ என்று சொன்னால், அதைப் பற்றி விவாதிப்பதற்கு இடமுண்டு. ‘தமிழ் இலக்கியங்களைக் காட்டிலும் சிறந்த இலக்கியங்கள் வேறு மொழிகளில் இருக்கத்தான் இருக்கின்றன’ என்று சிலர் வாதிக்கலாம்; சாதிக்கவும் செய்யலாம்.

ஆனால் இரண்டு கலைத் துறைகளில் தமிழகம் இணையற்ற பெருமை வாய்ந்தது என்பதைப் பற்றி யாருமே ஆட்சேபிக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டில் உள்ளவை போன்ற சிற்பக் கலையின் சிகரமான ஆலயங்கள் உலகில் வேறு எங்கும் இல்லை.

தமிழ்நாட்டில் வழங்கும் கர்நாடக சங்கீதத்தைப் போன்ற சங்கீதம் உலகில் வேறு எங்கேயும் கிடையாது.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தையும் ஐரோப்பிய சங்கீதத்தையும் தமிழர்கள் பயின்று தேர்ச்சி பெற்று விடலாம்.

ஆனால் கர்நாடக சங்கீதத்துக்குரிய ஒரு கன ராகத்தை வேறு எந்த நாட்டு மகா சங்கீத வித்வானாலும் எவ்வளவு முயன்றாலும் முறைப்படி ஆலாபனம் செய்ய முடியாது.

– ரா. கிருஷ்ணமூர்த்தி ‘கர்நாடகம்’, ‘ஆசிரியர் முகவுரை’,
சங்கீத யோகம், பக். xv–xvi.

80

'இந்த வீட்டிலே தீப் பிடித்துக் கொண்டது!'

ஒரு பெரிய மனிதர் பெரிய மாளிகை கட்டி கிரகப் பிரவேசம் நடத்தினார். அதில் கச்சேரி செய்த வித்வானை ஹிந்துஸ்தானி பாடச் சொன்னார்கள்.

'இஸ் கர்கே ஆக் லக் ஆயி'

என்று அவர் அபூர்வ பிர்காக்களுடன் பாடியபோது கரகோஷம் பிரமாதமாய்க் கிளம்பிற்று. அந்த வரிக்கு அர்த்தம் மட்டும் தெரிந்திருந்தால் வித்வான்தான் பாடியிருப்பாரா? கேட்பவர்கள்தான் கரகோஷம் செய் திருப்பார்களா? லட்சம் ரூபாய் செலவழித்து வீடு கட்டிக் கிரகப்பிரவேசம் செய்யும் சமயத்தில்,

'இந்த வீட்டிலே தீப் பிடித்துக் கொண்டது'

என்று பாடினால், யாருக்குத்தான் அது சம்மத மாயிருக்கும்?

– கல்கி, சங்கீத யோகம், ப. 20.

81

பெண்மையின் இரு வித சக்திகள்

கல்கியின் முத்திரை அழுத்தமாகப் பதிந்துள்ள வரலாற்று நாவல் ‘பொன்னியின் செல்வன்’. அதில் வரும் இரு பெண் பாத்திரங்கள் குந்தவை தேவியும் நந்தினியும். இருவருமே அபூர்வ சக்தி - அற்புத சக்தி - ஆளும் சக்தி படைத்தவர்கள்; என்றாலும், இருவருக்கும் இடையே நுட்பமான வித்தியாசமும் உண்டு. இதோ, கல்கியின் சொற்களிலேயே அதைக் காண்போம்:

“ஒருவன் நரகத்தில் விழப் போகிறவனாயிருந்தால், அவனைத் தடுத்து நிறுத்திக் குந்தவை தேவி சொர்க்கத்துக்கு அவனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார். அது ஒரு வித சக்தி. நந்தினி என்ன செய்வாள் தெரியுமா? அவளுடைய சக்தி இன்னும் ஒரு படி மேலானது என்றே சொல்ல வேண்டும். நரகத்தையே சொர்க்கம் என்று சொல்லிச் சாதித்து அதை நம்பும்படியும் செய்து, நரகத்தில் சந்தோஷமாகக் குதிக்கும்படி செய்து விடுவாள்!”

– ‘கல்கி கலெக்‌ஷன்’, ‘கல்கி,’ 1.11.1998, ப. 46.

82

பாடலாசிரியர் கல்கி

"பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுத்துலகிலே புகுவதற்கு முன்பு இசையுலகிலே உலவியவர் என்பது பலருக்குத் தெரியாது! அவருடைய இளமை நாட்கள் பாட்டும் பஜனையும் கலந்த இசை வாழ்விலே கழிந்தன என்பதை முதன்முதல் கேட்ட போது எனக்குமே வியப்பாகத தான் இருந்தது.

பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தமையனார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் அந்த நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திச் சொல்லிக் கொண்டிருந்தார். தம்பியும் தானுமாகச் சேர்ந்து சிறு வயதில் பஜனைப் பாடல்கள் பாடுவது வழக்கம் என்றும், பிற்காலத்தில் கல்கி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் பிரசாரத்தில் ஈடுபட்ட போது தேசீயப் பாடல்கள் பலவற்றையும் உணர்ச்சிப் பெருக்கோடு பாடுவார் என்றும் தமையனார் ஆனந்தக் கண்ணீர் மல்க எடுத்துச் சொன்னார். தம்பியின் பாட்டுத் திறத்தில் அத்தனை ஈடுபாடு அவருக்கு!"

– 'சோமு', 'கல்கியின் பாடல்கள்', சுடர் : கல்கி மலர் (1967), தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 62.

83

தெய்வத் தமிழ் நாட்டினிலே...

அமரர் கல்கி இயற்றி, எம். எஸ். சுப்புலட்சுமி பாட, இசைத் தட்டாக வெளியான பாடல்:

"தெய்வத்தமிழ் நாட்டினிலே வெண்ணிலாவே – நாங்கள்
தீரமின்றிப் பேதையர்போல் வாழ்ந்திருந்தோம் – ஏதும்
செய்வதறி யாதிருந்த போதினிலே – ஒரு
சிங்கநாதம் கேட்டெழுந்தோம் வெண்ணிலாவே!

இருளடைந்த நாடிதென்று எவரோ சொன்னார் – அந்த
இழிவும்ஒரு பெருமைஎன்று எண்ணி வாழ்ந்தோம் – நல்ல
அறிவொளியால் இருளகற்ற ஒருவர்வந்தார் – இதை
அமரர்நா டென்றறிந்தோம் வெண்ணிலாவே!

கங்கையெனப் பொங்கிவரும் தண்தமிழினில் – இன்பக்
கவிதைபல புனைந்தளித்தார் வெண்ணிலாவே! – வெற்றிச்
சங்கமூதி முரசறைந்து எழுகவென்றார் – இந்தத்
தரணியில் நமக்குநிகர் இல்லையென்றார்....

கவியரசர் பாரதியின் கவிதை இன்பம் – உன்
கதிரொளியில் காண்பதென்ன வெண்ணிலாவே – இந்தப்
புவியில்நீயும் தமிழனெனப் பிறந்ததுண்டோ – அவர்
புதுமைக்கவி மதுவருந்தி மகிழ்ந்ததுண்டோ?"

–'கல்கி,' அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், 13.9.1998, ப. 56.

84

சிறுகதையின் முக்கிய அம்சம்

சென்னை வானொலி ஆரம்பித்த மறு வாரமே கல்கி 'தமிழில் சிறுகதைகள்' என்ற ஒரு சொற்பொழிவு செய்திருக்கிறார்.

"...நான் இன்று கதை சொல்ல வரவில்லை. தமிழில் உள்ள சிறுகதை இலக்கியத்தைப் பற்றிச் சொல்லத்தான் வந்திருக்கிறேன். அதற்குப் பூர்வ பீடிகையாக, சிறுகதை என்றால் என்னவென்பதைச் சிறிது கவனித்துக் கொள்வோம்....

சிறுகதையின் முக்கிய அம்சம், அதில் ஒரேயொரு பிரதான சம்பவந்தான் இருக்கவேண்டும். அந்த சம்பவத்தை, வெறும் வளர்த்தல் இல்லாமல், வேறு சம்பந்த மற்ற விஷயங்களுக்குப் போகாமல், நேரே நெடுகச் சொல்லிக் கொண்டு போனால், அது நாலு வரியில் இருந்தாலும் சிறுகதை தான்; நாற்பது பக்கங்கள் வந்தாலும் சிறுகதை தான்...."

– சோ. சிவபாதசுந்தரம், விகடனுக்கு வயது ஐம்பது (1928–1978), 1938–ம் ஆண்டுத் தொகுப்பு, ப. 84.

85

'நாலே வார்த்தைகளில் பளிச்-சென்று விஷயத்தைச் சொல்லுங்கள்!'

ஒருநாள், காஞ்சீபுரம் உபய வேதாந்த தாத்தையங்கார் ஸ்வாமிகள், அவருடைய வேலைக்காரன் குப்பனைக் கூப்பிட்டு, 'அடே, குப்பா, நீ உடனே ஸ்ரீ பெரும்புதூர் திருவேங்கடாச்சாரி ஸ்வாமி வீட்டுக்கு ஓடிப் போய், 'திருக்குடந்தை திரு.நாராயண அய்யங்கார் ஸ்வாமி திருக்கோயில் ஆராதனைக்குப் போனபோது திருப்பாசி வழுக்கவே திருவடி தவறி விழுந்தார் என்று சொல்லு' என்பதாகத் திருவாய் மலர்ந்தருளினார்.

'ஆகட்டும் சாமி' என்றான் குப்பன்.

தாத்தையங்கார், தமது வைஷ்ணவ பரிபாஷை அவனுக்குப் புரிந்ததோ என்னமோ என்று சந்தேகப்பட்டு, 'என்னடா சொல்வாய்?' என்று கேட்டார். அதற்குக் குப்பன் 'தெரியாதா சாமி! கும்பகோணத்துப் பாப்பான் குட்டையிலே விழுந்தான்' என்று நாலே வார்த்தைகளில் பளிச்சென்று விஷயத்தைச் சொன்னான் பாருங்கள்!

பழைய கதை தான்; ஆனாலும் அதைக் கொண்டே புதுமைச் சிறுகதையின் வடிவத்தையும் உத்தியையும் கல்கி எடுத்துச்சொன்னார்.

– சுந்தா, பொன்னியின் செல்வர், ப. 465.

86

வரலாற்று நாவலாசிரியர் கல்கி

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி புனைகதை இலக்கியத்தில் கருத்தைச் செலுத்தியபின் அவர் உருவாக்கிய முதல் எழுத்தோவியம் 'விமலா' என்னும் குறுநாவல். 1922-ஆம் ஆண்டு முதன்முறையாகச் சிறைத் தண்டனையை அனுபவித்த போது, கூடலூர்ச் சிறையில் கல்கி இக் குறுநாவலை எழுதினார். இதன் மூலம் அவர் ஒரு நாவலாசிரியரானார் எனக் கொள்ளலாம். இந்நாவல் பின்னர், வ.ரா. நடத்திய 'சுதந்திரன்' என்னும் இதழில் வெளிவந்தது.

1937-ஆம் ஆண்டில் கல்கி 'ஆனந்த விகட'னில் 'கள்வனின் காதலி' என்னும் தமது முதல் முழுநாவலை எழுதி வெளியிட்டார். 1939-ஆம் ஆண்டில் 'தியாக பூமி' என்னும் நாவலை வெளியிட்டார். 1941-ஆம் ஆண்டில் தமது சொந்த இதழான 'கல்கி'யில் 'பார்த்திபன் கனவு' என்னும் தமது முதல் வரலாற்று நாவலை எழுதினார். புனைகதை எழுதத் தொடங்கிச் சுமார் இருபதாண்டுகளுக்குப் பின்னரே கல்கி வரலாற்று நாவலாசிரியரானார்."

– பூவண்ணன், கல்கியின் வரலாற்று நாவல்கள், ப. 19.

87

'எனக்கு நாடகம் எழுத வராது!'

"கல்கி அலுவலகம் சென்று ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பார்த்தேன். 'சுபத்திரையின் சகோதரன்' சிறுகதையை நாடகமாக்கித் தரும்படியாக வேண்டினேன். கல்கி சிரித்துக்கொண்டே சொன்னார்:

'மிஸ்டர் ஷண்முகம், கிருஷ்ணமூர்த்தி என்ன, சகலகலாவல்லவன் என்று நினைத்துக் கொண்டிருக் கிறீர்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு நாடகம் எழுத வராது. உங்களுக்குப் பிடித்தமான நாடக எழுத்தாளர் யாரையாவது எழுதச் சொல்லுங்கள். அந்த எழுத்துப் பிரதியை எனக்கு அனுப்பி வையுங்கள். நான் சரிபார்த்துக் கொடுத்து விடுகிறேன்...'

எந்த எழுத்தாளர் இப்படித் தம் திறமையைக் குறைத்துக் கொண்டு சொல்வார்! மாமேதை கல்கிக்குத்தான் அந்தத் துணிவு இருந்தது. இப்படித் தைரியமாகத் தம்மைப் பற்றி ஒப்புக்கொள்ளவும் ஒரு தனிப்பண்பு வேண்டுமல்லவா?"

– அவ்வை தி.க. சண்முகம், எனது நாடக வாழ்க்கை, ப. 488.

88

‘திறமையைப் பாராட்டுவார், ஊக்கப்படுத்துவார் கல்கி’

திறமை யாரிடமிருந்தாலும் அதை மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுவார், ஊக்கப்படுத்துவார் கல்கி. அலுவலகத்தில் அச்சுக் கோப்பவராக இருந்தார் விந்தன். அவர் ஒரு சிறுகதை எழுதி ஃபோர்மேனிடம் தர, அவர் கல்கி அவர்களின் மேஜையின் மேல் வைத்துவிட்டுச் சென்று விட்டார். படித்துப் பார்த்த கல்கி, ‘யார் எழுதியது இதை? பிரமாதமாக இருக்கிறதே!’ என்று பாராட்ட, அச்சுக் கோக்கும் விந்தனை அழைத்து வந்தார், ஃபோர்மேன். விந்தனை மேலும் மேலும் ஊக்கப்படுத்தி அவரையும் ஓர் உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார் கல்கி.

– பி.எஸ். மணி, ‘கல்கி’, அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், 13.9.1998, ப. 59.

89

மூன்று மாதத்தில் வாலிக்கு ஏற்பட்ட மன வளர்ச்சி!

வாலி ஒரு சிறுகதை எழுதி அதைக் 'கல்கி' இதழுக்கு அனுப்பி வைத்தார். ஒரு வாரத்திற்குள் அந்தச் சிறுகதை அவருக்கே திரும்பி வந்து விட்டது. உடனே கல்கி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்: "நேதாஜி கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட நீங்கள் இங்கு வந்திருந்த போது என் கதையைப பாராட்டிப் பேசினீர்கள். ஆனால் புதிதாக எழுதி, 'கல்கி' இதழுக்கு அனுப்பிய கதையை உடனடியாகத் திருப்பி அனுப்பி விட்டீர்களே, நியாயமா?"

அந்தக் கடிதத்திற்குக் கல்கி அவர்களிடமிருந்து உடனடியாக மறுமொழி வந்தது:

"மூன்று மாதம் கழித்து அதே கதையை மறுபடியும் அனுப்பி வையுங்கள். நான் வெளியிடுகிறேன்!"

மூன்று மாதம் கழித்து அந்தக் கதையைக் 'கல்கி' இதழுக்கு அனுப்புவதற்கு முனைந்த வாலி, அதை மறுமுறை படித்துப் பார்த்தார். கதை அவருக்கே பிடித்தமாக இல்லை.

"கல்கி அவர்கள் இந்தக் கதையை வெளியிடாதது நியாயம் தான்" என்று வாலிக்குத் தோன்றியது. மூன்று மாத மன வளர்ச்சியின் காரணமாக அதை அனுப்பாமல் நிறுத்திக் கொண்டார்.

– அனுராதா ரமணன் நூல்கள் வெளியீட்டு விழாவில் கவிஞர் வாலி ஆற்றிய உரையிலிருந்து (கல்கி, 18.3.1984, ப. 21).

90

கல்கி வாங்கித் தந்த கார்!

“கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சென்னையில் அடையாறு பங்களாவில் வசித்து வந்தார். நான் தினமும் மாலை 4 மணிக்கு அவரைப் பார்க்கப் போவேன். இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசுவோம். பின்னர் விடைபெற்றுக் கொண்டு நான் வீட்டிற்குச் செல்வது வழக்கம். சில சமயம் இரவு 8 மணி ஆகும்.

ஒருநாள் இரவு 10 மணி ஆகிவிட்டது. கல்கியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். மாடியிலிருந்த படியே அவர் நான் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந் தார். கேட் அருகில் நான் சென்றதும், என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, ‘கார் எங்கே?’ என்று கேட்டார்.

‘காரா? கார் ஏது?’ என்றேன்.

‘சரி இங்கே வாங்கோ’ என்றார். மீண்டும் மாடிக்குப் போனேன்.

‘தினமும் மாம்பலத்திலிருந்து எப்படி வருகிறீர்கள்?’ என்றார்.

‘பஸ் மூலம் தான். லஸ் வந்து பஸ் மாறி அடையாறு வருவேன்’ என்றேன்.

‘ஓகோ அப்படியா?’ என்று கேட்டுவிட்டுத் தம் மைத்துனனைக் கூப்பிட்டு என்னைக் காரில் வீட்டுக்குக் கொண்டு போய் விடும்படி சொன்னார். மறுநாள் வழக்கம் போல் நான் கல்கி அவர்கள் வீட்டுக்குப் போனேன். போனதும் கல்கி என்னைப் பார்த்து ‘உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியுமா?’ என்றார்.

‘ஓட்டுவேன்’ என்றேன்.

‘சரி, கீழே வாங்கோ’ என்று என்னைக் கூட்டிக் கொண்டு கீழே வந்தார். ஒரு ‘போர்டு ஆங்கிலியா’ கார் நின்று கொண்டிருந்தது.

'இதை ஓட்டுங்கள் பார்க்கலாம்' என்று கூறி அவரும் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டார். நான் காரை ஓட்டினேன். பீச் ரோடு வழியாகக் கார் சென்றது.

'பேஷ், பேஷ்! பிரமாதமாக ஓட்டுகிறீர்களே' என்று கூறி ராயப்பேட்டை கபாலி பெட்ரோல் பங்கில் நிறையப் பெட்ரோல் போடச் சொல்லி அவர் கணக்கில் கையெழுத்துப் போட்டார். பிறகு அவர் வீட்டுக்குப் போனோம். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து நான் விடைபெற்றேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள். கல்கி என் கையில் மேற்படி கார் சாவியையும், ஆர்.சி. புத்தகத்தையும் கொடுத்து 'இந்தக் காரை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், உங்களுக்குத் தான் வாங்கியிருக்கிறது' என்றார்.

'எனக்கு எதுக்குக் கார், மேலும் இதற்குக் கொடுக்கக் கூடிய பணமும் என்னிடம் இல்லையே' என்றேன்.

கல்கி சிரித்துக் கொண்டே, 'பணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். காருக்குக் கொடுக்க வேண்டிய பணம் பூராவும் கொடுத்தாயிற்று. நீங்கள் தினமும் என்னைப் பார்க்க வரவேண்டியிருக்கிறது. எனக்கும் அன்றாடம் உங்களைப் பார்க்காவிட்டால் என்னவோ போலிருக்கிறது. என் ஆப்த நண்பராகிய நீங்கள் பஸ்ஸிலும் நடையிலும் என்னைப் பார்க்க வருவதை நான் தெரிந்து கொண்டும் சும்மா இருந்தால் அந்த நட்பு உண்மை நட்பு ஆகாது. ஆகவே தான் இந்த ஏற்பாடு. நம் நட்பின் அடையாளமாக இந்தக் கார் உங்களையும் என்னையும் தினமும் சேர்த்து வைக்கும்' என்று சொன்னார்.

சொல்லும் போதே அவர் கண்களில் நீர் பனித்தது. என் கண்கள் குளமாயின."

– சின்ன அண்ணாமலை, சொன்னால் நம்ப மாட்டீர்கள், பக். 120–122.

VII. கல்கியின் படைப்பாற்றலும் பெருவாழ்வும்

91

‘கல்கி’ என்ற புனைபெயர் பூண்டதன் காரணம்

“நான் ‘கல்கி’ என்ற புனைபெயரில் முதன்முதலாக எழுதிய கட்டுரையைப் (‘ஏட்டிக்குப் போட்டி’, ஆனந்த விகடன், ஆகஸ்ட், 1928) படித்தவர்களுக்கு இந்தப் புனைபெயரின் அர்த்தம் புரியும். நான் பழமையான சம்பிரதாயங்களையும் அர்த்தமற்ற பழக்க வழக்கங்களையும் விட்டொழித்துப் புதுமை யுகத்தை மலரச் செய்ய வேண்டும் என்ற கருத்தை அந்தக் கட்டுரையில் வெளியிட்டேன். இதுவரை கழிந்து போன யுகங்களைத் தவிர்த்துப் புதிய யுகத்தைச் சிருஷ்டிக்கப் போவதாக ஒவ்வோர் இளம் எழுத்தாளரும் எண்ணிக் கொண்டு எழுதுவது இயற்கை. அது போலவே நானும் அந்தக் காலத்தில் ஒரு புது யுகத்தைச் சிருஷ்டிக்கப் போகும் பெருவீரனாக என்னை நினைத்துக்கொண்டு, பகவானின் பத்தாவது அவதாரமும்,

புது யுகத்தைக் குறிப்பதுமான 'கல்கி'யென்ற புனைபெயரை அப்பொழுது வைத்துக் கொண்டேன்.

நம் பழங்கால மன்னர்கள் என்ன செய்தாலும் ஜோஸ்யர்களைக் கலக்காமல் செய்ததில்லை. அவர்கள் தொட்டதற்கெல்லாம் ஜோஸ்யம் பார்த்துக் கிரகங்கள் கூறுகிறவாறு நடத்திய அவர்களுடைய சாம்ராஜ்யங்கள் நிலைக்கவில்லை. இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டன. கொலம்பசும், வாஸ்கோடாகாமாவும், ராபர்ட் கிளைவும் ஜோஸ்யம் பார்த்துக் கொண்டா தங்கள் தாய்நாட்டிலிருந்து புறப்பட்டார்கள்? ஜோஸ்யம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது முதலான பல அர்த்தமற்ற வழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என்று, 'கல்கி' என்ற புனைபெயருடன் எழுதிய எனது முதலாவது கட்டுரையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். புதிய கருத்துக்களை வெளியிட்டு வாசகர்கள் மனத்தைப் புதிய திசையில் திருப்பி, புதிய யுகத்தைச் சிருஷ்டிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன்தான் 'கல்கி' என்ற புனைபெயர் பூண்டனே தவிர, இதற்கு வேறு எந்த விதமான காரணமும் கிடையாது.''

– சுந்தா, பொன்னியின் புதல்வர், பக். 3–4.

92

கல்கியின் வருணனைத் திறன்

கல்கியின் 'அலை ஓசை' நாவலின் இறுதிக் கட்டத்தில் ஒரு காட்சி. பஞ்ச நதிகளில் ஒன்றான சேனாபில், சீதா படகிலிருந்து தண்ணீரில் விழுகிறாள்:

"முடிவில்லாத நேரம் சீதா தண்ணீருக்குள் கீழே கீழே கீழே போய்க் கொண்டிருந்தாள். பிறகு தன்னுடைய பிரயாசையின்றியே மேலே வருவதை உணர்ந்தாள். முகம் தண்ணீருக்கு மேலே வந்தது. கண்கள் ஒரு கணம் திறந்தன...

அலை ஒன்று சீதாவை நோக்கி வந்தது. அது ஒரு அடி உயர அலைதான். ஆனால்... அது மலையளவு உயரமாகச் சீதாவுக்குத் தோன்றியது. பொங்கும் கடலைப் போல் ஓசை செய்து கொண்டு அந்த அலை விரைந்து வந்து சீதாவை மோதியது. சீதா பயத்தினால் கண்ணை மூடிக் கொண்டாள்...

தலைக்கு மேலே வெள்ளம் ஓடிக்கொண்டே, ஓடிக் கொண்டே, ஓடிக்கொண்டேயிருந்தது. நெற்றியின் மேலே அலை மோதிக்கொண்டே, மோதிக் கொண்டே, மோதிக் கொண்டேயிருந்தது. காதில் 'ஹோ' என்று இரைந்த அலை ஓசை, பல்லாயிரம் மக்களின் சோகம் நிறைந்த ஓலத்தை யொத்த அலை ஓசை, மற்ற எல்லா ஓசைகளையும் அமுக்கிக் கொண்டு மேலெழுந்த பேரலையின் பேரோசை கேட்டுக் கொண்டே, கேட்டுக் கொண்டே, கேட்டுக் கொண்டேயிருந்தது. தலைக்கு மேல் ஓடிய வெள்ளத்தின் பாரமும், நெற்றியில் மோதிய அலையின் வேகமும், காதில் தாக்கிய அலை ஓசை இரைச்சலும், முடிவில்லாமல், இடைவெளியில்லாமல் நீடித்துக் கொண்டேயிருந்தன" *(அலை ஓசை, பக். 790, 805-806).*

கல்கியின் வருணனைத் திறமையைப் பற்றித் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தமது நூலில் கி.வா. ஜகந்நாதன் எழுதுகையில் மேலே உள்ளதில் கடைசிப் பத்தியை ஓர் உதாரணமாய்க் காட்டியுள்ளார். 'இந்த வருணனையைப் பார்க்கும் போது, கல்கியே தண்ணீரில் மூழ்கிவிட்ட அனுபவத்தை அடைந்திருப்பார் என்று எனக்குத் தோன்றுகின்றது' என்கிறார் கி.வா.ஜ.

கி.வா.ஜ.வின் ஊகம் சரியானதே. உண்மையிலேயே கல்கி சிறுபிள்ளையாய் இருக்கையில் தண்ணீரில் மூழ்கிச் செத்துப் பிழைத்தவர்தான்!

– சுந்தா, பொன்னியின் புதல்வர், பக். 46–47.

93

கல்கியின் நடைச் சிறப்பு

தனிநாயக அடிகளார் கூறுவது போல், 'கல்கியின் நடை ஐம்பொறிகளுக்கும் இயல்பூக்கங்களுக்கும் அடி உள்ளத்துக்கும் விருந்தாகும் நடை'. ஓர் எடுத்துக்காட்டு:

"சாரதை பத்தரை மாற்றுப் பொன்னொத்த மேனியினாள். விசாலமான நெற்றியும், அறிவு ஊறித் ததும்பும் கண்களும் படைத்தவள். அவள் கண்களினுள்ளே இருந்த கருவிழிகளோ, அங்குமிங்கும் குறுகுறுவென்று அலைந்து கொண்டிருந்தன. தன் கடைக்கண் வீச்சாகிய ஒரே ஆயுதத்தின் துணை கொண்டு ஆடவரையும் பெண்டிரையும் அடக்கியாளும் திறனுடையவள் அவள் என்பது, அவ்விழிகளை ஒரு முறை பார்த்த அளவினாலே விளங்கும். அப்போதலர்ந்த ரோஜா மலரின் இதழை யொத்த தன் அதரங்களில் புன்னகையிருக்க, வேறு பொன், கல் நகைகள் எதற்கு என்று கருதியே போலும், அவள் அதிக ஆபரணங்கள் அணிந்து கொள்ளவில்லை. தலைப்பில் சரிகைக் கரை போட்ட நீலநிறக் கதர்ப் புடவை அவள் மேனி அழகைப் பதின்மடங்கு மிகுதிப்படுத்திக் காட்டிற்று."

– கல்கி, 'சாரதையின் தந்திரம்', சாரதையின் தந்திரம், பக். 7–8.

94

கல்கியின் எழுத்துக்கு இருந்த ஆற்றல்!

“ ‘ஜில் ஜில்’ என்று ஒரு பத்திரிகையைக் குழந்தை களுக்காக நடத்திய காலம். தபாலில் பல கதைகள் வரும். அப்படி வந்த கதைகளுள் ஒன்று ‘பாலுவின் பிரயாணம்’. எழுதி அனுப்பியவரின் முகவரியைப் பார்த்தால் ஒரே வியப்பு! அனுப்பியவர் பேராசிரியர் கல்கியின் குமாரர் கி. ராஜேந்திரன் என்று தெரிந்தது, கதை நன்றாக இருந்தது...

நண்பர் நவீனனை அழைத்துக் கொண்டு கல்கி அவர்களைச் சந்திக்க, அவருடைய அடையாறு இல்லத்துக்குப் போனேன். சோபாவில் பேராசிரியர் கல்கி அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் அரை நிஜார்ச் சிறுவனாக ராஜேந்திரன் நின்று கொண்டு என்னவோ சைகை காட்டினான். ‘அப்பாவிடம் காட்டாதே....!’ என்று அர்த்தம் போலிருக்கிறது.

என்னுடைய எண்ணமே, அந்தப் பத்திரிகையை அவரிடம் காட்டி ஆசி பெறுவது தானே.... காட்டினேன்.

'பையனைக் கெடுக்கிறாயா?' என்று கேட்டார். திரும்பினால் அங்கே 'பையன்' இல்லை. ஒரே ஓட்டத்தில் அங்கிருந்து ஓடிவிட்டான்.

'பேஷ்....பேஷ்! நம்ப தம்பி கூடக் கதை எழுதி இருக்கானா?' என்று ஒரு பக்கம் சந்தோஷம் வேறு.

சிறுவர் சிறுமியருக்காக வெளியிட்ட 'ஜில் ஜில்' பதிப்பக நூல்கள் சிலவற்றைக் கொண்டு போயிருந்தேன். அவரிடமே அவற்றைக் காட்டினேன்.... அவருடைய பாணியில் வாழ்த்துச் சொன்னார்.

அடுத்த வாரமே 'கல்கி' இதழில் 'ஜில் ஜில்' பற்றியும் 'ஜில் ஜில் வெளியீடுகள்' பற்றியும் ஓர் அற்புதமான மதிப்புரை எழுதினார். அதன் விளைவாக ஏகப்பட்ட மணியார்டர்கள் வந்து குவிந்தன. பணம் இல்லாமல் கஷ்டப்பட்டுப் பத்திரிகை நடத்திய அந்த நேரத்தில் சிறுகச் சிறுக மணி ஆர்டரில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் வந்தது. அப்போதுதான் அவருடைய எழுத்துக்கு எவ்வளவு பெரிய ஆற்றல் இருக்கிறது என்பதை நானே நேரடியாக உணர்ந்து கொண்டேன்."

– வானதி திருநாவுக்கரசு, நினைக்க நினைக்க..., பக். 21–23.

95

‘வாசகர்களை ஏமாற விடலாமா?’

கல்கியின் பொறுப்புணர்ச்சியையும், எழுத்தில் அவருக்கு இருந்த ஈடுபாட்டையும், சாகின்ற கடைசி வாரம் வரையில் அவர் ‘கல்கி’ இதழுக்கு எழுதிக் கொண்டு இருந்ததையும் குறித்துக் ‘கல்கி’ அச்சகத்தில் பணிபுரியும் திரு. டி.எம். ராஜாபாதர் கூறுவது வருமாறு:

“ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் வந்தது. கல்கி அவர்கள் தளர்ந்த குரலில் பேசினார்கள். ‘ஏன் தொடர்கதை கையெழுத்துப் பிரதியை வாங்கிப் போக யாரும் வரவில்லை!’ என்று அந்த நிலையிலும் சற்றுக் கோபமாகக் கேட்டார். நான் உடனே, ‘இல்லை சார். திரு. சதாசிவம் அவர்கள் திருப்பதிக்குச் சென்றிருக்கிறார். தங்கள் உடல்நிலையில் சிரமப்படுத்த வேண்டாமென்று தான்....! என்று இழுத்தேன். அவர், ‘உடனே புறப்பட்டு ஆஸ்பத்திரிக்கு வா’ என்று கூறி, டெலிபோனை வைத்தார். நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று அவர் அறையில் நுழைந்ததும், ‘இந்தா, இதை உடனே எடுத்துப் போய் ‘கம்போஸ்’ செய்து பாரத்தில் சேர்த்து விடு....’ என்றார். நான் உடனே, ‘இந்த உடல் நிலையிலும் நீங்கள் எழுத வேண்டுமா?’ என்றேன். கண் கலங்கிய படியே அவர், ‘வாசகர்கள் கதையைப் படிக்க எவ்வளவு ஆர்வமாக இருப்பார்கள்? அவர்களை ஏமாற விடலாமா? அதனால் தவறாமல் எழுத வேண்டியது தான் முறை’ என்றார். அவர் இறக்கும் போது கூட அந்த வாரம் எழுதி விட்டுத் தான் மறைந்தார்.”

– கா.பொ. இரத்தினம் (பதிப்பாசிரியர்), எழுத்தாளர் கல்கி, பக். 26–27.

96

‘பொன்னியின் செல்வ’னைப் படிப்பதில் பாட்டிக்கு இருந்த ஆர்வம்

சென்னையில் 9.9.1998 அன்று நடைபெற்ற அமரர் கல்கி நூற்றாண்டுத் தொடக்க விழாவில், அக்காலத்தில் வாரந்தோறும் ‘கல்கி’யை வாங்குவதில், அமரர் கல்கியின் தொடர்களைப் படிப்பதில் மக்கள் காட்டிய ஆர்வம் பற்றிக் குறிப்பிட்ட சிவசங்கரி தம் பேச்சின் இடையே சொன்ன ஒரு தகவல்:

“என் பாட்டி மிகவும் வயதானவர். கல்கியின் ரெகுலர் வாசகி. அப்போது ‘பொன்னியின் செல்வன்’ முதல்முறை வெளிவந்து கொண்டிருந்த சமயம். வாரா வாரம் அதைப் படிக்கும் போது என் பாட்டி புலம்புவார்: ‘ஐயோ, நான் செத்துப் போவதற்குள் இந்தப் பொன்னியின் செல்வன் முடிந்து விட வேண்டுமே!’

அதைப் படிப்பதில் அத்தனை ஆர்வம்!”

– **‘கல்கி,’ 20.9.1998, ப. 6.**

97

‘மானசீகக் குரு கல்கி’

‘அமுதசுரபி’ இதழின் ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன், அமரர் கல்கி நூற்றாண்டு விழாவை ஒட்டி எழுதிய கட்டுரையில் கூறியிருப்பது:

“நான் கல்கியை மானசீகக் குருவாகக் கொண்டதற்குக் காரணம்: அவர் தேச பக்தர். அவர் காந்தி பக்தர். அவர் பாரதி பக்தர்.

மூன்றும் என் இலட்சியங்களாக இருந்ததால் நான் கல்கியைக் குருவாகக் (ஏகலைவன் போல் - ஆனால் கல்கி எனும் துரோணர் விரலைக் கேட்க மாட்டார்; பதிலாக ஆசி எனும் சக்தியை அருள்வார்.) கொண்டேன்....

சோழர் காலத்தின் சிறப்பைத் தமிழ் மக்கள் அறிந்து பெருமை கொள்ளச் செய்தவர் கல்கி. பல்லவர்களின் கலைச் சிறப்பைத் தமிழ் மக்கள் அறியச் செய்தவர் கல்கி. பாரதியாருக்கு நினைவுச் சின்னம் ஏற்படச் செய்தவர் கல்கி.... தமிழ் இசை இயக்கம் வேரூன்ற வழி செய்தவர் கல்கி.

மேலே குறிப்பிட்ட அவர் சாதனைகள் அனைத்தும் அவருடைய வரலாற்றின் அத்தியாயங்கள். தமிழ் மொழிக்கென்று ஓர் உருவம் தீட்டப்பட்டால், அந்த உருவம் பேராசிரியர் கல்கியாகத் திகழும்.”

– அமுதசுரபி, செப்டம்பர் 1998, பக். 4.

98

'ஒரு நிறுவனமாகவே வளர்ந்தவர்!'

"கல்கி மிகப் பெரிய மேதை. தம்முடைய எழுத்தாற்றலால் லட்சக்கணக்கான வாசக அபிமானி களைப் பெற்ற எழுத்தாளர் அவர். .... எழுதுவது என்பது பலரையும் போய்ச் சேர வேண்டும் என்பதே கல்கியின் கொள்கை. வெறும் நாலு பேரோடு நின்று விடுவதில்லை எழுத்து....

அன்றைக்கே சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைத் தம் எழுத்தில் வடித்தவர் கல்கி அவர்கள். சரித்திர நாவல்களைக் கூட பரவலாக ஜனங்களைப் படிக்கச் செய்தவர் அவர். அதனால்தான் அன்றைய சரித்திர ஆசிரியர்கள் 'புரவி' என எழுதிக் கொண்டிருந்ததைக் கல்கி அவர்கள் 'குதிரை' என்றே எழுதினார்; மக்களுக்குப் புரியும்படி எழுதினார்.

கல்கியின் சினிமா விமர்சனங்கள் கூட மிகவும் கூர்மையாக இருக்கும். எங்களது ஜெமினி பிக்சர்ஸ் படங்கள் பலவற்றை அவர் கடுமையாக விமர்சித்திருக் கிறார். அதே சமயம் 'ஔவையார்' படம் எடுத்ததன் மூலம் வாசன் அவர்கள் தமிழுக்கு மிகப் பெரும் தொண்டாற்றி இருக்கிறார் என உளமாரப் பாராட்டினார். எனவே கல்கி அவர்கள் நேர்மையான விமர்சகராகவும் இருந்திருக்கிறார்.

அமரர் கல்கி அவர்கள் தமது பன்முகத்தன்மையால் வெறும் எழுத்தாளராக மட்டுமல்ல, ஒரு நிறுவனமாகவே வளர்ந்தவர் என்பேன் (He is an institution)".

– ஆனந்த விகடன் ஆசிரியர் எஸ். பாலசுப்ரமணியன் பேட்டி, செம்மலர், அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், செப்டம்பர் 1998, பக். 27–28.

99

அடையாளம் காட்டும் எழுத்து!

“பேராசிரியர் கல்கி அவர்களின் ‘பொன்னியின் செல்வ’னில் வருகிற பாத்திரம் தான் வானதி. அதையே முதலில் பதிப்பகத்துக்கும் பிறகு என் பெண்ணுக்கும் பெயர் சூட்டினேன். என் மனத்தை அழுத்தி ஆக்கிரமித்துக் கொண்ட பாத்திரம் ‘வானதி’....

எழுத்தில் நிலையான கம்பீரம் இருந்தது. வேண்டாம் என்று ஒதுக்கி விடக் கூடிய ஓர் எழுத்தும் கல்கியிடம் இருந்ததில்லை. நாவலாகட்டும், சங்கீதக் கட்டுரை களாகட்டும், அரசியல் விவகாரங்களாகட்டும், அவருக்கே உரிய நகைச்சுவைக் கட்டுரைகள் ஆகட்டும் ஒவ்வொரு எழுத்தும் ‘இதோ கல்கி’ என்று எவ்வளவு காலம் ஆனாலும் அடையாளம் காட்டும்.”

– வானதி திருநாவுக்கரசு, நினைக்க நினைக்க..., பக். 24–25.

100

'கல்கியின் வாழ்க்கை ஓர் அற்புத ஜோதி'

இருபதாம் வயதில் பிடித்த பேனாவை ஐம்பத்து நான்காம் வயது வரை - அதாவது மறையும் வரை - கல்கி கீழே வைக்கவேயில்லை.

"சாவதற்கு முன் என் சக்தி முழுவதையும் உபயோகித்து விட விரும்புகிறேன். வாழ்க்கையை ஒரு சிறு மெழுகுவர்த்தியாக நான் கருதவில்லை. அதை ஓர் அற்புத ஜோதியாக மதிக்கிறேன். அதை எதிர்காலச் சந்ததி யாருக்குக் கொடுப்பதற்கு முன், எவ்வளவு பிரகாசமாக எரிய வைக்க முடியுமோ அவ்வளவு பிரகாசமாக எரிய வைக்க விரும்புகிறேன்!" என்றார் காலஞ்சென்ற பெர்னார்ட்ஷா. அதை அப்படியே வாழ்க்கையில் கடைப் பிடித்தவர் கல்கி.

– 'அமரர் கல்கி', மாந்தருக்குள் ஒரு தெய்வம், ப. vii.

‘மோகன் நாற்பது’

ஆசிரியரின் நூல்கள்

I. ஆராய்ச்சி

1. டாக்டர் மு.வ.வின் நாவல்கள்
2. அறிஞர் மு.வ.
3. கு.ப. ராஜகோபாலன் சிறுகதைகள்
4. ஆய்வியல் வழிகாட்டி (இணையாசிரியர்)
5. புனைகதைத் திறன்
6. பண்டிதமணியின் நடை நயம்
7. உரை மரபுகள் (இணையாசிரியர்)
8. திரு.வி.க, அல்லது வாழ்க்கை விளக்கம்
9. இலக்கிய நயம்
10. இலக்கிய வளம்
11. இலக்கியச் சுடர்
12. கு.ப. ராஜகோபாலன்
13. இலக்கியச் சோலை
14. காந்தீயக் கவிஞருடன் ஒரு கைகுலுக்கல்
15. இலக்கியச் சால்பு
16. இலக்கிய அலசல்
17. வ.சுப. மாணிக்கம்

II. பதிப்பு

18. டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம்
19. டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் (இணைப் பதிப்பாசிரியர்)
20. பரல்கள்: தொகுதி 2 (இணைப் பதிப்பாசிரியர்)
21. பொதிகை: மலர் 1 (இணைப் பதிப்பாசிரியர்)
22. புகழ்பெற்ற சங்க இலக்கியப் பொன்மொழிகள் (இணைப் பதிப்பாசிரியர்)
23. பாரதி இயல் (இணைப் பதிப்பாசிரியர்)
24. புதுக்கவிதை அணி வகுப்பு
25. நாவல் வளர்ச்சி
26. தமிழியல்: தொகுதி 1 (இணைப் பதிப்பாசிரியர்)
27. அண்ணல் தமிழ் (இணைப் பதிப்பாசிரியர்)
28. தமிழ் உலா: 2 தொகுதிகள் (இணைப் பதிப்பாசிரியர்)
29. பெண்ணியம் (இணைப் பதிப்பாசிரியர்)
30. சிற்பியின் கட்டுரைகள்
31. கல்கி நூறு

III. தொகுப்பு

32. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்
33. ஜெயகாந்தன் சிந்தனைகள்
34. சங்க இலக்கியத் தொகை
35. துணுக்கு இலக்கியம்
36. துணுக்குத் திரட்டு
37. படித்ததும் பிடித்ததும்
38. மகிழ்ந்ததும் நெகிழ்ந்ததும்
39. சிரித்ததும் சிலிர்த்ததும்

IV. புதுக்கவிதை

40. சின்னச் சின்ன இழை (இணையாசிரியர்)

பதிப்பாசிரியர்

டாக்டர் **இரா.மோகன்**

மணிவாசகர் பதிப்பகம்